* SRI S. SWAYAMPRAKASAM :—" The agriculturists are actually engaged in cultivation operations and they must know beforehand what relief is given to them under the particular Act. Therefore, the language must be very simple. If a particular word is likely to have two meanings, the Government must eschew that word and use simple language in such a way that ingenious lawyers will have no scope for interpreting it as they like. (Interruption.) There is bound to be that kind of hair-splitting. Lawyers are there to do that. So long as lawyers are there, so long as the Government or any other machinery has not put an end to the lawyer class and so long as the courts are there, we must anticipate all the arguments of ingenious lawyers and make suitable provisions taking them into account. Now, the point I was driving at was this. The Ordinance was issued when the assembly was to meet shortly. That sovereign body, namely, the Assembly, must have the opportunity to say ' yes ' or ' no ' to the Ordinance. That body has the power to legislate and pass laws. That power was taken away by the Governor in issuing the Ordinance. I have met some Members of Parliament and they have said that the practice in the Parliament with respect to such matters is this. When an Ordinance is issued, it is afterwards introduced in the House or in the Parliament without any change in the form of a Bill. Only on the floor of the House or the Parliament, if the Government want to make any changes, it can be modified by way of amendments. Otherwise, certain ingenious lawyers may later on take the matter to the Court of Law and argue that the procedure adopted by the Government is not proper. Then, the whole Bill may be declared *ultra vires* and it may become a nullity. Therefore, if such a contingency should arise and if the enactment is declared null and void, then what is the relief that we are giving to the public concerned? That is the anxiety of lawyer Members on this side of the House.

(At this stage, the Deputy Speaker occupied the Chair.)

" Now, the Hon. the Chief Minister was saying that he had come forward with an amendment to the clause relating to definitions so that the term ' agriculturists ' would include lessees also. Originally it was, as a matter of fact, argued by some of my lawyer friends and by some Ministers also that the expression ' a person who owns an interest in land ' would include a lessee also. Now, even ' The Hindu ' wrote a leader the other day agreeing with my view and saying that this Bill would exclude lessees. The Hon. the Chief Minister may say, ' Do not put it this way that even ' The Hindu ' has written such and such a thing."

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Yes, what if 'The Hindu' says it? "

11th January 1954]

* SRI S. SWAYAMPRAKASAM :—" *The Hindu* is not an ordinary paper. It is read by all the judicial officers and they come to conclusions, taking into account the view expressed by it."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" The newspaper is there simply to raise all sorts of doubts."

* SRI S. SWAYAMPRAKASAM :–" As I said, the language must be very simple. One gentleman may read a particular portion of the Bill and understand it one way. Another lawyer may read it in his own way and understand it differently. Suppose the Judge happens to feel like myself, what will be the fate of the agriculturists? The relief sought to be given cannot be given. I am glad that the amendment is introduced at least now. Only income-tax assessees have been excluded from the purview of the Bill. What about the big mirasdars? It is stated that people who are actually engaged in the cultivation of lands should not be disturbed by having to go to a Court of Law and waste time. Sir, big mirasdars are not going to the field for cultivation purposes. Why do the Government contemplate giving relief to big mirasdars owning 1,000 and 2,000 acres? Where is the necessity for it? The object of the Bill is to give relief to agriculturists who are actually engaged in the cultivation of lands. (Interruption.) Surely, credit facilities will be affected. Why should the Government give relief to big mirasdars? "

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" I have already explained that I do not want litigation to go on as to the amount or extent of land in three or four districts and so on. If the hon. Member will give me a list of names, I shall proscribe those people."

* SRI S. SWAYAMPRAKASAM :—" As a matter of fact, I not have in my possession any names. But there are persons of the kind referred to. I only complain about the way in which the Bill has been brought up for discussion towards the end of the session. The Government do not allow us to have a free discussion and understand the implications of the various amendments. The Government have got in their minds some big people to whom they want to give relief."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Let the hon. Member give me a list of such persons."

* SRI S. SWAYAMPRAKASAM :—" I am not interested in all these things. The Government have asked the concerned people to prepare a Bill for this purpose and they have for months considered this matter. At last, the Ordinance was promulgated which gave relief to both the big people and the poor people. Now, in the Bill, you take away the relief sought to be given to the poor people."

THE HON. SRI SUBRAMANIAM:—" I want to know whether the Deputy Speaker has taken away anything. The hon. Member should address the Deputy Speaker."

SRI S. SWAYAMPRAKASAM:—" I do not understand why the Hon. the Leader of the House interrupted me."

THE HON. SRI C. SUBRAMANIAM:—" The hon. Member should address the Deputy Speaker and not me."

SRI S. SWAYAMPRAKASAM:—" Mr. Deputy Chairman, Sir, . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM:—" He is not Deputy Chairman; he is Deputy Speaker."

DEPUTY SPEAKER:—" The hon. Member should address the Chair."

SRI S. SWAYAMPRAKASAM:—" Mr. Deputy Speaker, Sir, I am only complaining about the way in which the Bill has been introduced and the provisions of the Ordinance have been changed. According to the Ordinance, relief would be available to the big mirasdars as well as the poor agriculturists."

(At this stage, there was some noise in a section of the House.)

DEPUTY SPEAKER:—" If hon. Members want to speak with one another, let them leave the House and do so."

* SRI S. SWAYAMPRAKASAM:—" In this Bill, the relief sought to be given to poor persons has been taken away. But, on the other hand, the relief given to big mirasdars is kept. It leads us to think that the Government have got some proposals to give relief to certain particular set of persons.

11 a.m. " That is exactly our argument and that is exactly why I raised a point of order the other day. There is no point in asking me to supply names. That is all beside the point. When we bring forward a legislation like the one that we are now considering, we ought to be careful and ought to comply with objects underlying the Bill. The statement of Objects and Reasons appended to the Bill states very clearly that the Bill provides relief only to those who are actually engaged in cultivation. It is definitely stated that this Bill has been brought forward in the best interest of the Grow More Food Campaign and in the best interests of those persons who are actually engaged in cultivation. But we find that according to certain provisions in the Bill, even those people who are far away from the lands and who do some other business are also sought to be included here. That is exactly the point which I wish to bring to the notice of the Government. I request the Government to look into the matter and see that only those who are really engaged in cultivation get the benefit.

11th January 1954] [Sri S. Swayamprakasam]

"The Hon. Chief Minister was pleased to say that co-operative institutions must be exempted. Nowadays, some people have been saying that co-operative institutions are bringing relief to poor agriculturists. We find that to-day the number of persons who get relief from these co-operative institutions is increasing day by day. A great number of them get relief from these societies. That being so, what is the point in excluding the co-operative societies from the operation of this Bill? What is the real remedy that these poor agriculturists will get when these societies are excluded? Practically, they will get no remedy at all. Their suffering will not be reduced, but will only increase. It so happens that many a private money-lender and many a private creditor accommodate these poor agriculturists to a greater extent than these co-operative societies. These people are inclined to give some time to these poor agriculturists to clear off their dues, but not these co-operative societies. The method adopted by these societies is this. Even for a paltry sum, they take away the valuable properties of the debtors and that too without their knowledge. Actually, these poor people are not aware of the societies' action for taking away their things for the paltry sum that they owe them. This creates a lot of difficulties and suffering for the poor agriculturists. If we calculate the number of people, I mean the poor agriculturists in Tamilnad who are indebted to these co-operative societies, I am sure it will be a very great number. That being so, I cannot really understand the reason for excluding co-operative societies from the operation of the Bill. I request the Government to see that these societies are also brought within the purview of the Bill.

"About the clause relating to limitation, I myself am not quite clear. There are people who doubt whether the Government are within their rights and whether they have got power to give this limitation. The limitation question has got to be considered very carefully and examined. If this clause relating to limitation is decided to be *ultra vires*, the whole Bill goes to the ground. The relief that has been given in the Bill will be taken away. When the Bill has now come before us for consideration, it is but proper that we should have facilities and we should also take some time to study the various provisions carefully. This Bill must be considered leisurely and properly. There is no point in rushing the Bill. This is a very important legislation which should give relief to those who are really in need of it. It should not be hastened like this. With these few words, I insist that it must be properly considered and should be circulated for eliciting public opinion."

The motion was duly seconded.

DEPUTY SPEAKER:—"I fix a time limit of 5 minutes for each hon. Member. Hon. Member Sri Rajachidambaram will now speak."

11–04 a.m. * SRI P. B. K. RAJACHIDAMBARAM :—" மன்றத்துணைத் தலைவர் அவர்களே! விவசாயிகளின் நலனுக்காக அரசியலார் எடுத்துக்கொண்டிருக்கும் இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை ஆதரிக்க நான் முன்வந்திருக்கிறேன். ஆனால் இந்த மசோதாவினால் முழு பலனும் இந்த ஒரு சூழ்நிலையில் ஏற்படுமா என்றுதான் அஞ்சு கிறேன். காலையில் முதல் அமைச்சர் அவர்கள் சில விஷயங்களைச் சொல் லியதிலிருந்து இந்த சூழ்நிலை சற்று தெளிவாக ஆயிற்று. அதற்கு நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்த போதிலும், முதல் வந்த அவசரச் சட்டத்தைவிட, பின்னால் கொண்டு வந்திருக்கும் சட்டத்தில் பல வசதிகள் செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறதே, அந்த பலனெல்லாம் இந்தச் சட்டத்தால் கைகூடுமா என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லாம் வேண்டும் அன்றேல் ஒன்றும் வேண்டாம் என்று குறைகூறுகிறார்களென்று கனம் முதல் மந்திரி அவர் கள் சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதே சமயத்தில் நாங்கள் செய்யக்கூடியதைத்தானே செய்யச் சொல்லுகிறோம். செய்வதில் என்ன ஆட்சேபனை என்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு.) இன்று காலையில் நண்பர் கனம் சுயம்பிரகாசம் அவர்கள் பதில் சொல்லும்போது இதுபற்றி நன்றாக விளக்கம் கொடுத்தார். அது ஓரளவு சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் அவரைப்போல் சட்டம் அறிந்தவ னல்ல. நான் ஒரு கிராமவாசி. மசோதாவில் லீசி (lessee) என்ற வார்த்தையை அவர் உபயோகப்படுத்தி இருக்கிறார். அதன்படி ஒருவர் இந்தச் சட்டத்தின் சலுகைபெற லீசியாக இருக்கவேண்டியிருக்கிறது. சென்ற வருஷம், அல்லது அதற்கு முந்திய வருஷங்களில் lesseeயாக இருந்து, இப்போது அவர்கள் குத்தகைக்காரராக இல்லாமல் இருந்தால் இந்தச் சட்டத்தில் சலுகை இல்லை என்று சொல்வது நியாயமாகத் தெரியவில்லை. அதை மாற்றவேண்டுமென்று நான் ஏற்கனவே சொன்னேன். ஆனால் நான் சட்டம் அறியாதவன்."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" அவ்வாறு மாற்ற முடியாது."

* SRI P. B. K. RAJACHIDAMBARAM :—" கனம் முதல் மந்திரி அவர்கள் விளக்கிவிட்டார். குத்தகைக்காரர்களுக்கு இந்தச் சட்டத் தில் விலக்குக் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். இந்த சட்டத் தின்படி முன்பே கடன்பட்டிருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. இன்று உண்மைக் கடனாளி யார் என்று கணக்கெடுப்பது கடினம். ஆகவே இன்று அவர்களிடமிருந்து வசூல் செய்வதும் முடியாது என்று சொல்லு கிறேன். கிராம வாழ்க்கையை நன்றாக உணர்ந்தால் இந்த சந்தேகம் கனம் நிதி மந்திரி அவர்களுக்கு ஏற்படாது."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" எனக்கு நன்கு தெரியும்."

* SRI P. B. K. RAJACHIDAMBARAM:—" கிராமத்தில் வாழ்ப வர்கள் அனைவருக்கும் நிலத்தை வைத்துக்கொண்டு யாரும் கடன் கொடுப் பதில்லை. அவர்களுக்கு இன்று பணம் கடனாகக் கிடைப்பது பூராவும் அவர்களின் நாணயத்தின் மதிப்பாலேயே கொடுக்கப்படுகிறது. விவசாயி களுக்கு கடன் ஒத்திவைப்பு வசதி செய்யப்படுவதால் ஒருவித பலனும் கிடையாது. ஏராளமான சொத்துக்கள் அவர்களின் நாணயத்தை நம்பி யேதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே விவசாயிகளின் நாணயத்தை நாம் குறைக்கக்கூடாது. நம் மாகாணத்தை எடுத்துக்கொண்டால் ஒரு வரு ஷத்திற்கு ரூ. 250 கோடி விவசாயத்திற்கு செலவிடப்படுவதாக கணக்கிடப் பட்டிருக்கிறது. இத்தொகையில் பத்து கோடி ரூபாய்தான் அரசாங்கத்தின் மூலமும் ஐக்கிய நாணய சங்கத்தின் மூலமாகவும் கடனாக கொடுக்கப்படு கிறது. கிராமத்திலுள்ள விவசாயி பாரபட்சமில்லாமல் விவசாயத்தை நடத்திவருகிறான். அவனுக்கு எழுதப்படிக்கக்கூட தெரியாது. அவன் எவ்வித வழக்குக்கும் செல்வதில்லை. ஒவ்வொரு வருஷமும் அவன்

11th January 1954] [Sri P. B. K. Rajachidambaram]

பயிரிட செலவு செய்துகொண்டிருக்கிறன். அவனுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், திரும்பி பெறுவதற்கும் கனம் நிதி மந்திரியவர்கள் எவ்வித வழியும் சொல்லவில்லை. 100-க்கு 10 பேருக்கு தானே குறைந்த வட்டிக்கு பணம் வழங்குவதாகமட்டும் நிதி மந்திரியவர்களால் சொல்லப்படுகிறது. மீதி 90 பேரும் நாணயத்தின் பேரில்தான் விவசாயிகளுக்கு கடன் கொடுத்துவருகிறார்கள். ஆகவே இன்று சிலரும், பத்திரிகைகளும் கிராமத்திலுள்ள குடியானவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுவதாகச் சொல்வது அவர்கள் கிராம வாழ்க்கையை அறியாத காரணம் என்பதை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் விவசாயி என்ற பதத்திற்கு சரியான அர்த்தம் அறிந்துகொள்ளவில்லை என்பதை மீண்டும் எடுத்துச்சொல்லி இதில் குத்தகைதாரர்களையும் சேர்த்துக்கொள்ளும்படி இந்த சபை முடிவு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கனம் முதல் மந்திரி அவர்கள் குத்தகைக்காரர்களுக்கு இதில் விதி விலக்கு அளிக்கக்கூடாது என்று கூறினார். இதனால் கிராமத்திலுள்ள குத்தகைக்காரர்களுக்கு மிகவும் பாதகம் ஏற்படும் என்பதை அறியவேண்டும். அரசாங்கத்தால் பொதுமக்களுக்கு 20 வருஷ காலத்தவணையில் பணம் வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அவ்வாறு ஒதுக்கியுள்ள பணத்தில் இந்தக் குத்தகைக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு நிவாரணமளிக்க என்ன ஆட்சேபனை இருக்கிறது என்று தெரியவில்லை. அவர்களுக்கும் விதிவிலக்களித்து இதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" தவிர நில அபிவிருத்தி சட்டத்தின் (Land Improvement Act) கீழ் விவசாயிகளுக்கு இனமாக அரசாங்கத்தாரால் கிணறு வெட்டுவதற்கு பணம் கொடுக்கப்பட்டது. அத்தொகையை பல விவசாயிகள் வாங்கி, அதோடு தாங்கள் கொஞ்சம் கடன் வாங்கி கிணறுகளை வெட்டினார்கள். ஏதோ சில காரணங்களுக்காக இப்போது அரசாங்கம் அதைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்கிறார்கள். அதை ஒத்திவைத்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. அவ்வாறு ஒத்திவைப்பதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது என்று தெரியவில்லை.

" மேலும் Pump set, ரசாயன உரம் முதலியன வாங்குவதற்கு அரசாங்கம் பணம் உதவி அளிக்கிறது. அதையும் ஒரு ஆண்டுக்கு ஒத்திப்போடுவதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது என்பதை கனம் முதல் மந்திரி அவர்கள் சொல்லவில்லை. அந்த முறையிலும் இதை ஒப்புக்கொள்ள முடியாது. இங்கு எனக்கு அளிக்கப்பட்ட நேரம் 5 நிமிஷமேயாதலால் நான் இன்னும் சொல்லவேண்டுமென்று நினைத்துள்ளவற்றை சொல்ல முடியவில்லை. நண்பர்களும், பிறரும் இன்னும் பல விஷயங்களை நல்ல முறையில் எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

* Sri S. RAMASAMY NAIDU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே ! பழுதில்லா உழுதொழிலை மேற்கொண்டும் தொழுதுண்டு வாழ்கிறான் விவசாயி. அவனுக்கு சர்க்கார் உதவி செய்ய முன்வந்தது நியாயமானதே. ஆனால் இன்று அந்த விவசாயிக்கு உண்ண உணவு இல்லை ; நல்ல வீடு இல்லை ; சௌகரியமாக படுக்க படுக்கையில்லை. நிலத்தை உழுது பயிரிடும் விவசாயிக்கே உண்ண உணவில்லாது இருக்கும் நிலையில், இன்று அரசாங்கம் அவர்களுடைய சௌகரியத்திற்காக கடன் வசூலிப்பை ஒத்தி வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட மான்யத்தை இன்றைக்கு சர்க்கார் கொண்டுவந்து ஓரளவு நிவாரணம் அளிக்க முன்வந்திருப்பதற்கு மிகவும் பாராட்டுகிறேன். 11-10 a.m.

" குறிப்பாக 6 வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கு பருவ மழை பெய்ததினால் இயற்கையின் அருளால் விவசாயிகள் உண்ண உணவும், கைச்செலவிற்கு சிறிது பணமும் வைத்திருக்கும் நிலையில் இருக்கிறார்கள். அதை கடன்காரர்கள் வந்து கேட்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு இந்தக்

கடன் ஒத்திவைப்பு மசோதா சௌகரியம் செய்கிறது. பின்னால் கடனை கொடுத்துக்கொள்ளலாம் என்பதற்காகவும், அதிக கடன் பளு ஏறுமலிருப்பதற்காகவும் தங்கள் கையிலிருக்கும் பொருளை வைத்து அதிக மகசூல் செய்து அடுத்த வருஷம் சேரவேண்டியதை செலுத்த அதிக சக்தியிருக்கும் என்ற நோக்கத்தோடுதான் இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான ஒரு நல்ல முறையால் இன்றைக்கு எல்லாப் பெரிய விவசாயிகளுக்கும் சலுகை கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் ஒத்தாசை செய்வதை மனதில் கொண்டுதான் இன்றைக்கு எல்லோருக்கும் சௌகரியம் செய்யப்படுவதாக சர்க்கார் இந்த மசோதாவைகொண்டு வந்திருப்பதாக சிலர் கருதுகின்றனர். அதை ஒப்புக்கொள்ள முடியாது. 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பதைப்போல், ஏழை விவசாயிகளுக்கு செய்யப்படும் சௌகரியங்கள் காரணமாக ஒரு சில பெரிய விவசாயிகளுக்கும் சௌகரியம் ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். அவர்களை கணக்கெடுத்தாலும் வெகு சிலரே இருப்பார்கள். அதைப் பற்றி கவலைப்படவேண்டியதில்லை. ஏழைகளின் கஷ்டத்தை நீடிக்க விடாமல் நிவர்த்திசெய்ய இந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்ததற்காக எதிர்க்கட்சிக்காரர்களாயிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்காரர்களாயிருந்தாலும், இந்தச் சட்டசபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் பெருமை கொள்ளவேண்டும். ஆகவே இச்சட்டத்தை நிறைவேற்றி ஏழைமக்களுக்கு பொங்கல் பரிசாக நாம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்போது கூட்டுறவு இயக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கடனையும் ஒத்திவைக்கவேண்டுமென்று எதிர்கட்சி நண்பர்கள் பலர் கேட்டார்கள். கூட்டுறவு இயக்கத்தில் விவசாயிகளுக்கு எவ்வளவு பணம் எந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். அப்படி கணக்கெடுத்துப் பார்த்தால் 8 மாதம், 10 மாதக் கடனே அதிகமாகக் காணப்படுகிறது. அந்தக் கடனும் 6 வருஷ காலத்திலே எவ்வளவு கொடுக்கப்பட்டு வசூலிக்கப்பட்டிருக்கிறதென்பதை கணக்கெடுத்தால் அந்த பாங்குகளுள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் அதிகப்படியாக 100-க்கு 90-க்கு மேல் வசூல் செய்யப்பட்டே இருக்கிறது. பணம் கிடைக்காத பஞ்ச காலத்திலே விவசாய சமயத்திற்கு சொற்ப வட்டிக்கு, கடன் கொடுக்கப்பட்டதென்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"தவிர, அதிகப்படியான பணத்திற்கு 20 வருஷக் கடன் வாய்தா மூலம் நில அடமான பாங்கால் (**Land Mortgage Bank**) கொடுக்கப்பட்டு, 20 வருஷத்திற்கு வசூலிக்கும்படி செய்யப்பட்டுள்ளது. அது விவசாயிகளை பாதிக்காது என்பது நிச்சயம். ஆகையால் இன்றைக்கு இந்த ஒரு வருஷக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை நாம் வரவேற்கவேண்டும். அதற்காக நாம் பெருமைப்படவும் வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். இன்றைக்கு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படும் நிலையில் இருக்கிறார்கள்.

'ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய் நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள'

என்பதுபோல் இந்த வருஷத்துப் பலனை ஆதாரமாக வைத்து கடவுளருளால் நல்ல மழை பெய்து அடுத்த வருஷம் விதைக்கப்போகும் வேளையிலே கடன்காரர்கள் வழிமறிக்க இல்லாமலிருப்பதற்காக இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமாக இருப்பதாகும். அதை அனைவரும் ஆதரித்து, நாளை வரப்போகும் பொங்கல் புதுதினப் பரிசாகக்கொண்டு போக இதை அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

11th January 1954]

SRI S. S. RAMASAMY PADAYACHI :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகளுக்கு தற்காலிகமாக நிவாரணம் அளிப்பதற்கு அவர்கள் வாங்கிய கடனை ஒரு வருஷத்திற்கு வசூலிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவந்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டில் இந்த சட்டத்திற்கு எந்த தரப்பிலிருந்து எதிர்ப்பு வந்திருக்கிறது என்றால் அது வக்கீல் சங்கங்களிலிருந்துதான் வந்திருக்கிறது. இந்த மாகாணத்திலுள்ள வக்கீல் சங்கங்கள்தான் இதற்கு எதிர்ப்பு செய்துகொண்டுவருகின்றன. இது நாடு அறிந்த உண்மை. அதைப்பற்றி கவலைகொள்ளவேண்டியது இல்லை. 'விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மைகளும் இல்லை. இந்த சட்டத்தில் அநேகம் இழுக்குகள் இருக்கின்றன' என்ற பலச் சட்ட நுணுக்கங்களை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இந்த சட்டம் சரியில்லை. இதைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொல்லிவருகிறார்கள். இந்த சட்டம் எந்த விதத்திலும் நிறைவேற்றப்படாமல் இருக்க அதை தடுத்துவிடவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவில் இந்த சட்டத்தைக் கொண்டுவராமல் இருப்பதற்கு அவர்கள் முயற்சி செய்துவருகிறார்கள். அதனால் இதை select Committee-க்கு விடவேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். அதையெல்லாம் எடுத்துக்கொள்ளாமல் இன்றைக்கு இந்த சட்டத்தில் பல்வித திருத்தங்கள் செய்து அவைகள் விவசாயிகளுக்கு பயனளிக்கும் படியாக அதை சட்டமாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 11-15 a.m.

"கடந்த ஏழு எட்டு வருஷங்களாகப் பருவ மழை இல்லாமல் விவசாயிகள் பல கடன் தொல்லைகளுக்கு ஆளாகி இருக்கிறார்கள். கிராம விவசாயிகளுக்கு சொத்துக் கிடையாது. அவர்களுடைய நாணயத்தின்பேரில் தான் அவர்களுக்குக் கடன் கொடுத்துவருகிறார்கள். சில இடங்களில் வட்டி வாங்காமலும் நாணயமாக கடன் கொடுத்துவருகிறார்கள். பருவ மழை தவறியதால் இதுவரையிலும் அவர்களால் கடனைக் கொடுக்க முடியவில்லை. இந்த வருஷம் அதைக்கொடுக்க முன்வருகிறார்கள். அவர்கள் வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்காமல் கடனைக் கொடுக்க வசதி வந்தவுடன் அவர்களுக்கு வட்டி விலக்கு அளிக்கவேண்டும் என்று வீட்டை தேடிக்கொண்டு வருகிறார்கள். கோர்ட்டு வழக்கைத் தடுத்து வருவதோடு அவர்களாகக் கொடுக்க முன்வருவதை தடுத்து நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் இந்த சட்டத்தில் எழவில்லை. தற்காலிகமாக ஒரு வருஷத்திற்குக் கடன் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கக்கூடாது என்றுதான் சட்டத்தில் சொல்லப்படுகிறது. இப்பொழுது பருவ மழை பெய்து நன்றாக விவசாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலாவது அவர்கள் முன்னேறலாம் என்பதற்காகத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த எண்ணம்தான் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த விதத்தில், விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு அரசாங்கம் முன்வந்ததற்கு அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். அதன்படி அவர்களுக்கு இதைச் சட்டமாக்கி வசதி செய்துகொடுக்கவேண்டும். அதே மாதிரி கூட்டுறவு மூலமாக வாங்கிய கடன்களைக் கொடுப்பதிலும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். கனம் ராஜா சிதம்பரம் சொன்னதை நான் வரவேற்கிறேன். அரசாங்கம் மாத்திரம் கொடுத்த கடனை வசூலிக்கலாம் மற்றவர்கள் கொடுத்த கடனை மட்டில் ஒரு வருஷம் தள்ளி கொடுக்கலாம் என்று சொல்வது எந்த வகையில் நல்லது என்று கேட்கிறேன். ஒரு விதத்தில் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று சட்டம் கொண்டுவரும்போது இதையும் கவனிக்கவேண்டும். இப்பொழுது ஒரு வருஷம் கழிந்த பிறகு எல்லா கடனையும் ஒரே தடவையில் வசூலிக்கக்கூடிய ஆபத்தும் இதில் இருக்கிறது. இந்த ஆபத்தைத் தடுக்க அரசாங்கம் ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டும். அதாவது கடன்கள் வாங்கியதை மூன்று தடவைகளாகக்கொடுக்கவேண்டும் என்ற ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும். மற்றொரு விஷயம். இப்பொழுது விலைவாசிகள் குறைந்து இருக்கிறது. விவசாயம் செய்யும் செலவுகள் இன்னும் குறையவில்லை. சென்ற வருஷம் ரூ. 30 என்று விற்றது இந்த வருஷம் ரூ. 20 க்கு விற்கப்படுகிறது. ஆனால் விவசாய செலவு குறையவே இல்லை.

ஆகையினால் விவசாயிகள் தங்களுடைய கணக்கை சரிக்கட்ட முடியவில்லை. ஆகையால் வாங்கிய கடனை ஒரேயடியாக கொடுத்துவிட முடியாது. மூன்று ஆண்டுகளில் மூன்று தடவைகளில் அதைக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே மூன்று தவணைகளில் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்ற யோசனையை இந்த சட்டத்தில் சேர்த்து இதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI V. K. RAMASWAMI MUDALIAR :—" Mr. Deputy Speaker, Sir, though I welcome this Bill, I am of opinion that it should be gone into in detail and in all its aspects. Unless it is examined carefully, I am afraid, agricultural credit will disappear and the villagers will be put to much hardship. Therefore, the Bill should be referred to a Select Committee now and then it should be taken up leisurely, in the next session if possible. I am of opinion, that it requiries certain modifications in respect of certain provisions, particularly ' Definitions '. Before I speak on those modification, I would request the Government to extend this concession to the loans advanced by them, like takkavi loans, pump-set loans, etc. They should not think that other loans alone should be taken into account. I know in some cases certain landlords—I mean house-owners in Madras —have purchased waste lands in the adjoining Chingleput district in places like St. Thomas Mount and Pallavaram. They purchased these waste lands during ration days for purposes of bringing rice into the city. They did not pay any income-tax or property tax nor do they pay now. They borrowed money for business purpose and they should not be allowed to take shelter under this Bill in the matter of repayment of such loans. No protection should be given to such people.

" Then, Sir, I shall speak about the amendments which I consider essential. In the Preamble, wherever the expression ' agriculturist ' occurs, the words in the State of Madras' should be added. There are business people here in Madras having lands and they may come forward to claim the concession now afforded. That is a matter for serious consideration. Therefore, the term ' agriculturist ' should be defined as one who holds and owns lands in the State of Madras. Then, to clause 2 (c), there should be a proviso, ' provided that the debt arises or is incurred in connection with agriculture. I have another amendment also to the effect that any sum payable to any company or bank under the Indian Companies Act or to any co-operative society should be added to clause 2 (c) after item (v). We must give some protection to the banks and if adequate protection is not given to banks, the credit of the country will go. If this is not done, agriculturists will be hard hit by this measure."

11-23 a.m. SRI C. KANDASAMY :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்த சபை முன்பாக இருக்கக்கூடிய கடன் ஒத்திவைப்பு சட்டம் சம்பந்தமாக ஒரு வருஷத்திற்கு விவசாயிகளுக்கு கடன் தொந்தரவுகள் இல்லாமல் பாதுகாப்பு அளித்ததை நான் வரவேற்கிறேன்.

" அடுத்தபடியாக கனம் முதல் மந்திரி அவர்கள் பேசும்போது இந்த சட்டத்தை தவறாக புரிந்துகொள்ளக்கூடாது என்றும், ஒரு வருஷத்திற்கு இந்த சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்பதற்காக இந்த

11th January 1954] [Sri C. Kandasamy]

சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றும் கடனை குறைப்பதற்கோ அல்லது கடனை ரத்து செய்வதற்கோ எந்த எண்ணமும் அரசாங்கத்திற்குக் கிடையாது என்றும் சொன்னார். இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் போது விவசாயிகள் ஒரு வருஷத்திற்கு கடன் தொந்தரவுகள் இல்லாமல் இருந்தாலும் அவர்களுக்கு தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதாவது ஒத்தாசை செய்யவேண்டும். விவசாயிகள் நல்ல வாழ்க்கையை நடத்தவேண்டும் என்றாலும் அல்லது விவசாயிகளுக்கு ஏதாவது வசதி செய்யவேண்டும் என்றாலும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய வழியில் வசதி செய்து கொடுப்பதோடு அவர்கள் இனிமேல் கடன் வாங்குவதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இது ரொம்பவும் அத்தியாவசியமாக இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்து சொல்ல ஆசைப்படுகிறேன். இதே மாதிரிதான் காங்கிரஸ் விவசாய சீர்திருத்த கமிட்டியும் சிபாரிசு செய்திருக்கிறது. ஒரு நில சீர்திருத்த சட்டம் கொண்டுவந்தால் முதலில் விவசாயிகளுக்கு வசதி செய்துவிட்டுதான் அந்த விதமான சட்டம் கொண்டு வருவது சௌகர்யமாக இருக்கும். அவர்கள் கடன் வாங்குவதற்கு வசதி செய்து கொடுத்தால்தான் அதைத் தொடர்ந்து செய்யும் சட்டங்களால் அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதாகும். விவசாயிகள் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே விவசாயி சமூகம் முன்னேற்றம் அடைவதற்கு திட்டவட்டமாக காங்கிரஸ் விவசாய சீர்திருத்த கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. இதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"ஒரு வருஷ அவகாசம் கொடுத்திருந்தாலும் அவர்கள் ஒரு வருஷத்திற்குள் எந்த அளவு தங்களுடைய கடனை குறைத்துக்கொள்வதற்கு முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். இந்த ஒரு வருஷ அவகாசத்தை அவர்கள் பூர்ணமாக பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இதை ஆட்சியாளர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக இந்த சட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான விஷயம் இப்பொழுது விவசாயிகளுக்கு கூலி கடன் இல்லை என்று நினைத்துவிட்டார்கள். பி. வி. நாராயணசாமி கமிட்டி யுத்த காலத்திற்குப் பின் விலைவாசிகளைப் பற்றியும், கடன்களைப்பற்றியும் விசாரித்து பரிசீலனை செய்து திட்டவட்டமாக ரிப்போர்ட் எழுதி இருக்கிறார்கள். அதாவது 25 ஏக்கருக்கு அதிகமாக உள்ள விவசாயிகளுக்குத் தான் கடன் குறைந்து இருக்கிறது என்றும் அதற்குக் குறைவாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு கடன் அதிகரித்து இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். '**Debts of the landless labourers has increased more than that of the others**' என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே சிறு நிலக்காரர்கள்தான் அதிகமாகக் கடன் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சொத்து இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் நாணயமாக நடந்து கொண்டு வருவதால் அவர்களால் கடன் வாங்க முடிகிறது. அவர்களுக்கு சொத்து இல்லாவிட்டாலும் தங்களுடைய சொந்த உழைப்பினால் அவர்கள் மாதா மாதம் கொஞ்சம் மிச்சம் பிடித்து வந்து நாணயமாக தாங்கள் வாங்கிய கடனை திருப்பிக்கொடுத்து வருகிறார்கள். அதனால் மிராசுதார்கள் கடன் கொடுப்பதை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு ரூ. 100 கடன் கொடுத்துவிட்டு குறைந்த கூலிக்கு வேலைவாங்கி வருகிறார்கள். தாங்கள் கடன் வாங்கி இருக்கிறோம் என்று அவர்களும் உழைத்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கொஞ்சம் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே நில சீர்திருத்த சட்டம் கொண்டுவரும்போது இவர்களுக்கு வசதி செய்துவிட்டுத் தான் அதைக்கொண்டுவரவேண்டும். இப்பொழுது பருவ மழை பெய்திருக்கிறது. ஒரு வருஷமாவது அவர்கள் கடன் தொல்லை இல்லாமல் இருப்பதற்கு இதைக்கொண்டு வந்தது நல்லதுதான். அதற்கு ஆட்சேபனை இல்லை. அவர்கள் சாகுபடி செய்வதற்கு வசதியாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு வருடத்திற்கு அவர்கள் கடன் தொல்லை இல்லாமல் இருந்தால் அவர்களுடைய கடன் தொல்லை வெகுவாக குறைந்துவிடாது. சர்க்கார்

கடன்களையும், சொசைடி கடன்களையும் இது பாதிக்காது என்று சொல்லுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு கடன் தொல்லை குறைந்துவிடப் போவது இல்லை. அதைக்கூட கொஞ்சம் தளர்த்திவிட்டால் நல்லது. சர்க்காருக்கு அதனால் நஷ்டம் ஏற்படும் என்று நினைத்தால் இப்பொழுது சர்க்கார் செய்யும் சில அனுவசிய செலவுகளைக் குறைத்துக்கொள்ளலாம். அவ்விதம் குறைத்துக்கொண்டு இந்த கடனுக்கு சரிக்கட்டிக்கொள்ளலாம். எந்த செலவுகள் அனுவசியமான செலவுகள் என்பதை இப்பொழுது நான் எடுத்துக்காட்ட விரும்பவில்லை. நம்முடைய அத்தியாவசிய செலவுகள் என்ன என்பதை என்னால் எடுத்துகாட்ட முடியும். அரசாங்கம் எவ்வளவோ செலவுகளை குறைத்துக்கொள்ளலாம். அந்த மாதிரி செய்தால் அந்தக் கடனுக்குச் சரிகட்டிக்கொள்ளலாம். இப்பொழுது வந்திருக்கும் சட்டம் பணக்காரர்களுக்குத் தான் சலுகை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடியதில் பல ஓட்டைகள் இருந்தாலும் அதை சரிப்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும் அதை எவ்வளவு தூரம் திருத்திக்கொள்ளமுடியுமோ அதுவரையில் திருத்திக்கொள்ளவேண்டும். இப்பொழுது முடியாவிட்டாலும் பின்னால் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். அதற்காக இந்த சட்டத்தை ஒத்திப்போடக்கூடாது. எப்படியாவது இப்பொழுதே இரண்டொரு நாட்கள் உட்கார்ந்து இதை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் அவர்கள் நில ஆர்ஜிதம் சம்பந்தமாகவும், நிலவாரம் சம்மந்தமாகவும் குறிப்பிட்டார்கள். சென்ற வருஷம் அமுலுக்கு வந்த சட்டப் பிரகாரம் விவசாயிகளை வெளியேற்றி இருந்தால் அவர்களை இந்த சட்டம் கட்டுப்படுத்தாது என்று சொல்வது சரியானது அல்ல. அதில் மாறுதல் செய்யப்படவேண்டும். கடன் என்பதற்கு வியாக்யானம் செய்திருக்கும் இடத்தில் இதைச்சேர்த்து விட்டால் அதைக் cover பண்ண முடியும். அப்பொழுது விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டத்தை நிவர்த்திக்க முடியும். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இப்பொழுது கிராமங்களில் கூலி வேலை செய்து பிழைத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கும் நிலம் இல்லாமல் இருக்கிறவர்களுக்கும் இந்த சலுகையை அளிக்கவேண்டும். அவர்களுக்கு ஆதரவு அளிப்பதில் விலக்கு அளிப்பது கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" அவர்களுக்குத்தான் நிலம் இல்லையே ? அவர்களுக்கு நிலம் எப்படி கொடுக்க முடியும்."

SRI C. KANDASAMY :—" இந்தக் கடன் மசோதா காரணமாக அவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு கடன் வாங்குவதற்கு முடியாமல் இருக்கும். ஏனென்றால் ஒருவரும் அவர்களுக்குக் கடன் கொடுக்க முன்வரமாட்டார்கள். காங்கிரஸ் விவசாய கமிட்டி ரிப்போர்ட்டில் ஒரு முக்கியமான அம்சம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடன் சட்டம் செய்யும்போது கடன் வாங்குவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் ரொம்ப கவனம் செலுத்தவேண்டும் இப்பொழுது விவசாயிகள் கடன் வாங்கி விவசாயம் செய்யக்கூடிய நிலையில் இல்லை. அதனால் சர்க்கார் கூட்டுறவு மூலமாகவும், அரசாங்கம் மூலமாகவும் குறைந்தபட்ச கடன் கொடுத்து சலுகை காட்ட ஏற்பாடு செய்யவேண்டும். இப்படி இல்லாவிட்டால் இப்பொழுது விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும்போது அவர்களுடைய சொத்துக்களை எழுதிவாங்கிக்கொண்டுதான் கடன் கொடுப்பார்கள். அவர்களுடைய சொத்தில் ஒரு பகுதியை விலைக்குக் கொடுக்கும்படியும் நிர்ப்பந்தம் செய்யலாம். அந்த நிலைமை ஏற்படும். அதன் பிறகு தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியை எழுதிவைத்துவிட்டு பாக்கியை சாகுபடி செய்யவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படும். ஆகவே அரசாங்கம் அவர்களுக்கு கடன் வாங்குவதற்கு வசதி செய்துவிட்டு இந்த சட்டத்தை நிறைவேற்றவேண்டும். அதற்காகத் தான் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

11th January 1954]

* SRI K. R. NALLASIVAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே! கடன் ஒத்திவைப்பு அவசரச் சட்டத்தை நான் சில திருத்தங்களுடன் பரிபூர்ணமாக ஆதரிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்தச் சட்டம் வந்தவுடனேயே நகரபுறங்களிலுள்ள வக்கீல்களும், பத்திரிகைகளும் இதை ஆட்சேபிப்பதிலேயே கிராம விவசாயிகளுக்கு ஓரளவு பாதுகாப்பு கிடைக்கும் என்பதை எல்லோரும் உணர முடியும். எவ்வளவுக்கெவ்வளவு சிவில் கோர்ட்டுகளுக்கும், வக்கீல்களுக்கும் வேலையில்லாமல் போகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மை உண்டு என்பது எல்லோரும் காணக்கிடக்கின்ற உண்மை. (சிரிப்பு). அதுமட்டுமல்ல, இந்தச் சட்டம் சரியான சந்தர்ப்பத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் விவசாயிகளுக்கு கடனால் எல்லையற்ற துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மசோதாவில் பல குறைகள் இருந்தபோதிலும்கூட மொத்தத்தில் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிறது.

" நண்பர் கனம் ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் சொன்னதுபோல் இதிலே இன்றைக்கோ, பல நாட்கள் கழித்தோ செய்யலாம். இதில் முக்கியமான சமாச்சாரம் என்னவென்றால் கடன் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் இரண்டு காரியம் அரசாங்கம் செய்ததாகக்கொள்ளமுடியும். ஒன்று கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் அதிகமாகக் கொடுத்து கடன் உதவி செய்வதன் மூலமாக விவசாயிகளினுடைய கடன் தொந்திரவை குறைக்க முடியும். இரண்டாவதாக கூட்டுறவு இயக்கம் விவசாயிகளிடையே வேகமாகப் பரவ ஏதுவாகும். விவசாயிகளிடம் கூட்டுறவு இயக்கத்தை மிக நல்ல முறையில் பதிய வைக்கமுடியும். கடன்கள் ஓரளவுக்காவது கிடைத்தால்தான் விவசாயத்தை நல்ல முறையில் செய்ய முடியும். கூட்டுறவு இயக்கத்திலே விவசாயிகளை சேர்க்க எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் விவசாயிகளுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் அந்த இயக்கத்தில் சேருவதில் பெரும்பாலும் சிரமங்களைக் காண்கிறோம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே அவர்கள் இரண்டு காரியங்களை ஒரே சமயத்தில் நிறைவேற்ற அவர்களுக்கு நல்ல முறையில் கடன் கொடுத்துதவவேண்டும். தக்காவிக் கடன்கள் போன்ற பலவிதக் கடன்கள் இருக்கின்றன. கிணறு வெட்டுவதற்கு மான்யங்கள் போன்ற கடன்களினால் விவசாயிகளுக்கு மிகவும் தொந்தரவு உண்டாகி இருக்கிறது. அதையும் ஓரளவு சட்டத்திற்கு உட்படுத்திக்கொண்டு வந்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும்.

" இப்போது கிராமங்களில் நேரடியாக இந்தச் சட்டத்தினால் பாதிக்கும் படியான நிலையில் சில விதவைகள் இருக்கிறார்கள். 1,000, 2,000 ரூபாய் வைத்துக்கொண்டு காலம் தள்ளக்கூடிய ஏழை விதவைகள் அவர்கள். அவர்களுக்கு இந்த சட்டத்திலே நிச்சயமாக விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் ஏதோ ஒருவிதமாக வாழ்க்கையை நடத்த முடியும். அப்படிச் செய்யாவிட்டால் பெருவாரியாக பாதிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். ஆதலால் நிச்சயமாக விதிவிலக்கு அவர்களுக்கு இந்த சட்டத்திலிருந்து கொடுத்தாகவேண்டும்.

" இந்தச் சட்டம் ஒரு வருஷம் என்று இருப்பதை இரண்டு வருஷம் என்று நீடிக்கவேண்டும். அல்லது நாம் கடன் வசதிகளை அதிகப்படுத்தி ஆகவேண்டும். இரண்டில் ஏதாவது ஒன்றை செய்யாவிட்டால் இந்தக் கடன் ஒத்திவைப்பு சட்டத்தை கொண்டுவந்ததின் நன்மையை பரிபூர்ணமாக விவசாயிகள் அனுபவிக்கக்கூடுமென்று சொல்ல முடியாது. விவசாயிகள் நடுத்தெருவில் திண்டாடக்கூடிய நிலைமை தான் ஏற்படும்.

" கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் கொடுப்பதற்கு தேவையான ஏற்பாட்டை செய்யவேண்டும். மற்றும் இந்தச் சட்டத்தை இன்னும் மூன்று வருஷம் வரையில் நீடிக்கச் செய்ய வேண்டும். இன்னும் இதுபோன்ற திருத்தங்களும் தேவையாய் இருக்கின்றன. அவைகளைப் பின்னால் பிரேரேபிக்கப் போகின்றார்கள். ஆகவே இந்தத் திருத்தங்களுடன் நான் இந்தச் சட்டத்தை பரிபூர்ணமாக ஆதரிக்கிறேன்."

[11th January 1954

* SRI S. PANCHAKSHARAM :—" Mr. Deputy Speaker, Sir, I also belong to the unfortunate class of the much-maligned tribe of lawyers. My only consolation is that I am a humble member of the galaxy of eminent men to which seven Members on the Treasury Bench as also several others belonging to this and the opposite sides belong. If I rise to speak now, it is not with a view to embarrass the Treasury Bench or the Chief Minister in particular. On a former occasion, the Chief Minister has said that it was his misfortune to answer criticisms from this side of the House. Therefore, I wish to make it clear that I rise not to embarrass anybody but to make certain suggestions in order to get certain clarifications made with regard to the general frame of the Bill, so that there may be more definiteness as to what the Bill intends to do. It has been very lightly said that the lawyers are hit and, therefore, they are really vociferous and do not want this Bill. I am really sorry that the whole thing has been misunderstood. On a former occasion when the present Chief Minister was Prime Minister of Madras, an Act, viz., the Madras Agriculturists Relief Act was passed. That was in 1937-38. Then it was said lawyers would be completely thrown out of their profession. But what actually happened then? It was something totally different from what was feared. Lawyers had more work and courts had more work. I am of the same view with regard to the present Bill also. If it deprives lawyers of work for a time or if it gives no work to courts for a time, it is going to doubly compensate the lawyers in terms of work and will increase the work of courts. Many more courts will have to be established after this legislation which is passed now dies and is buried. On that account, I have no fear. I want to make a few suggestions in regard to the drafting of the Bill. When the Government come forward to give relief to agriculturists let them make their purpose clear, namely, relieving agricultural indebtedness temporarily.

11-40 a.m. " When I read the Preamble and also the comprehensive definition of the term ' agriculturist ', and ' debt ' I am inclined to think that the effect of the Bill is going to be far-reaching. It is not only going to grant relief to the agriculturists who till the soil but it includes within its scope all sorts of people who pay huge income-tax, who pay a large amount of sales tax on lakhs and lakhs of turnover, the landlords who do business in the cities but at the same time own a few cents of land in Kodambakkam. (An hon. Member: ' Kodambakkam is here in the city.') I am sorry, in Koyambedu or Poonamallee. I sincerely want to know whether traders and merchants who depend for their credit on scheduled banks and other private money-lenders are to be protected? There are absentee landlords, who are sought to be put on the same footing as the poor agriculturist who depends on his agriculture alone for his subsistence and who due to his present indebtedness is in dire need of some relief. Do these traders and merchants want any relief from their indebtedness? I am sure that they are not in need of this measure. They are

11th January 1954] [Sri S. Panchaksharam]

not in need of this protection. I know one or two memoranda have been submitted to the Government urging that the scope of the Bill may be restricted only to agriculturists and the scope of the definition of the word 'debt' may also be restricted to agriculturists. It seems they had stated that otherwise their credit economy will be upset, their business will be upset, and even their export and import business will dwindle. Most of them depend upon scheduled banks and money-lenders for their business. The definition of the word 'debt' includes in its operation all such people who have borrowed from these banks and money-lenders. I do not think Government intend to grant relief to all of them. Sir, this is not agricultural indebtedness. Commercial indebtedness and agricultural indebtedness are two different things.

"I also want to bring to the notice of Government another point. The agriculturists have been advanced loans by this Government under several heads. Large sums of money have been advanced to agriculturists in the shape of takkavi loans, well subsidies, loans for purchase of agricultural implements like pumpsets, etc. That is agricultural indebtedness. There is no meaning in taking away these debts from the scope of this Bill. To-day in my own district I know No. (1) forms are issued in hundreds. In Revenue parlance it means coercive steps are to be taken against agriculturists to extract their dues to Government in respect of the loans they had taken. Hundreds of forms are being issued against these agriculturists for realising their dues to Government to-day. That is also agricultural indebtedness. I do not like coercion of this kind. The real object of relieving agricultural indebtedness could not be met if the agriculturists are put to all sorts of difficulties as I had pointed out. I think that the dues to co-operative societies are also intended not to be stayed. Inasmuch as the scope of the definition 'agriculturist' as is now given is so wide, it has given rise to complexities. The ordinary creditors like yourself and myself who advance money to the agriculturists for any short period are now prevented from recovering the same from the agriculturists for a period of one year. Supposing those persons like yourself and myself who have given some short-term loans to the agriculturists and who are now being prevented from recovering them for one year, owe some money to the Government, or some society or some private money-lender, what is the position of the relative parties to-day? Where can they get their money? They cannot institute any proceedings against their debtors who are agriculturists, for this Bill gives the latter protection. Then will the Government or the Co-operative Society keep quiet without trying to recover the dues which they owe to them? On the other hand, they will bring the properties of the agriculturists to sale under arbitration proceedings or under the Revenue Recovery Act. I know how quickly the properties would be sold by the departments without a chance of the ordinary creditor sharing the sale proceeds. Such is the fate of the ordinary creditors now. I do not think either intentionally or otherwise the

Government seek to perpetrate this kind of injustice. The day before yesterday, the Hon. the Chief Minister while speaking during the third reading of the Malabar Tenancy Bill told the House that the landlords after all were a handful in number and they should also be protected. He had told us that they (the landlords) also must be treated with justice, just as the tenants. I am inclined to echo the sentiments of the Hon. Chief Minister word for word and letter for letter and replace the word 'landlord' there by the word 'creditor' here. Under the provisions of the present Bill and taking the definitions as they are now given, a great injustice is being done to the creditor."

DEPUTY SPEAKER:—"The hon. Member's time is up."

* SRI S. PANCHAKSHARAM:—"Just a minute more, Sir. I submit to the Government and request them to clearly define what is 'agricultural indebtedness' and what is 'commercial indebtedness'. They must clearly bring out the distinction between the two. The present conditions in urban areas are entirely different from the conditions in rural areas. The credit economy of the rural areas is totally different from urban economy. The credit economy is completely thrown out of gear now. The poor agriculturist is not able to take a loan from his neighbour or the local money-lender. For all the past six years, there has been continuous drought. Taking advantage of the indebtedness of the poor cultivator, the up-country money-lender has invaded the villages. Let not people imagine that he is only in the city. The invasion has spretd to the rural areas also. The local money-lender is nowhere in the picture now. These rich money-lenders from up-country are being approached by the poor cultivators for loans. These people lend money on even torn sarees or small trinkets. They extract abnormal interest from the poor agriculturists. Neither this piece of legislation, nor the Debtors Protection Act, nor the Usurious Loans Act—none of these Acts are going to prevent this class of money-lenders and the burly 'Kabuliwala' from extracting all that he can from the poor agriculturists to whom they had lent money and who in addition takes interest which is double the principal."

DEPUTY SPEAKER:—"The hon. Member had taken more than the allotted time."

* SRI S. PANCHAKSHARAM:—"One word more and I have done. Supposing one agriculturist were to lend to another agriculturist may be at that time the former may have some money to lend to the latter though at all times it is not the case, under the existing provisions of the Bill, the former cannot get back his dues from the latter. I think that that would put the former into lot of difficulties. How can he find his way out under the present Bill, if he wants to recover his dues. I would request Government to rectify that defect. With these words I shall conclude, Sir."

11th January 1954]

* **SRI K. R. SAMBANDAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை சில திருத்தங்களுடன் ஆதரிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கின்றேன். குறிப்பாக திருத்தங்கள் கொடுக்கப்பட்டவைகளில் பலவற்றை விவாதத்திற்கு வரும் முன்பே சர்க்கார் ஏற்றுக்கொண்டது பற்றி நான் வரவேற்கிறேன். அதோடு கூட கொஞ்சம் நிலம் இருந்தாலும் கூட சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் அதில் பாதுகாப்பு இருக்கிறது. குறைந்தது 300, 400 ரூபாய்க்குமேல் மாதா மாதம் வருமானம் வரக்கூடிய அதிகாரிகளுக்கும் கொஞ்சம் நிலம் இருந்தால் போதும். அவர்களுக்கும் இதில் பாதுகாப்பு இருக்கிறது." 11-45 a.m.

* **THE HON. SRI C. RAJAGOPALACHARI** :—" அவர்கள் அத்தனை பேரும் வருமான வரி செலுத்தக் கூடியவர்கள்."

* **SRI K. R. SAMBANDAM** :—" வருமான வரிபோடப்பட்டு இருப்பவர்கள் இதனால் பயனடையவில்லை என்று சொல்லுகிறார்கள். விற்பனைவரி செலுத்துபவர்கள் இந்த கடன் ஒத்திவைப்பு மசோதாவினால் பயன் அடைகிறார்கள். அவர்கள் அதிகமான முறையில் வியாபாரம் செய்து லாபம் அடைகிறார்கள். அவர்கள் விற்பனை வரி கட்டுகிறார்கள். அவர்களும் தான் பணத்தை நிலத்தின்மீது போட்டிருக்கிறார்கள். கொஞ்சம் நிலம் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்தச் சட்டத்தின்படி பாதுகாப்பு ஏற்பட்டு வருகிறது. ஆனால் ஒரு விதத்தில் ஏற்பட்டபோதிலும் மறுமுறையும் அவர்கள் கடன் வாங்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இதனால் வியாபாரம் தடைப்படுகிறது.

" தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்தார்களே அதில் ஒரு வேலிக்கு உட்பட்டவர்களுக்கு விதி விலக்கு (exemption) அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சில பேர்கள் நேரடியாகவே சாகுபடிச் செய்கிறார்கள். சில பேர்கள் குத்தகைக்கு விட்டுவிட்டு வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது கொஞ்சம் பணம் வைத்திருந்து அதைக் கடன் கொடுத்திருந்தால் அவர்கள் இந்த ஒரு வருஷம் வரையிலும் கடன் தொகையை கேட்கக் கூடாது என்று இருக்கிறது. ஒரு எக்கரிலிருந்து 10, 12 எக்கர் வரை வைத்திருக்கும் படியான சிறிய விவசாயிகளும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகளுடைய பாதுகாப்பிற்கு சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறோம். ஆனால் அதில் முக்கியமாக விவசாயிகளுக்கும் பாதுகாப்பு இல்லாதது போல் இருக்கிறது. அவர்களின் பேரில் நிலம் இருந்தால் அல்லது குத்தகைகாரராக இருந்தால் கொஞ்சம் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் நிலம் இல்லாத விவசாயிகள் மேலும் இப்போது சாகுபடி செய்யவேண்டுமென்றால் கடன் தேவையாய் இருக்கிறது. கோவாபரேடிவ் கிரடிட் சொசைடி மூலம் நிலம் இல்லாதவர்களுக்கு கடன் கிடைக்காது என்பது தெரிந்த விஷயம். அவர்களுக்கு கடன் கொடுக்கச் சர்க்கார் முன்வந்தால் அது மிகவும் நலமாக இருக்கும். நிலம் இல்லாத விவசாயிகளுக்கு எப்போதுமே கூட்டுறவு சங்கத்தின் மூலம் கடன் கிடைப்பது கிடையாது. இப்போதாவது இந்த கோவாபரேடிவ் சொசைடி மூலமாக அவர்களுக்கு பணம் கொடுத்து உதவினால் அவர்கள் விவசாயத்தை இன்னும் முழுமூச்சுடன் செய்து, நல்ல முறையில் முன்னேற்றம் அடைய வழி கோரியவர்கள் ஆவோம்.

" நகரத்தில் வாழ்கிறவர்கள் முனிசிபல் வரி செலுத்துகிறார்கள். அவர்களுக்கும் கொஞ்சம் நிலம் இருந்தால் போதும். பாதுகாப்பு இருக்கிறது. இது அவசியமே இல்லை. இந்த சட்டமானது விவசாயிகளுக்கு முக்கியமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் நலன் அடைய வேண்டுமென்று சொல்லிவிட்டு நகரத்தில் இருக்கிறவர்களுக்கும், இன்னும் பெரிய மிராஸ்தார்களுக்கும் இதில் பாதுபாப்பு அளிக்கும்படியான நிலையைப்பார்க்கும்போது கொஞ்சம் வருந்த வேண்டியதாயிருக்கிறது. இந்த மாதிரி முனிசிபல் வரி கொடுக்கிறவர்களுக்கு ஒரு விதமான பாதுகாப்பும் கிடையாது. அவர்கள் கடனைக் கொடுத்துத்தான்

ஆகவேண்டுமென்ற திருத்தம் சர்க்காரால் கொண்டுவரப்பட்டால் நலமாக இருக்கும். அவர்களுக்கு எல்லாவிதமான வசதி இருப்பதால்தான் நக ரத்தில் இருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையை நடத்து வதற்கே முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் திருத்தத்தை இப்படி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நானும் இந்த மாதிரியான திருத்தம் கொடுத்து இருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

" Economic Advisory Board-ல் இருந்த டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்லும்போது விவசாயிகள், கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறக்கிறார்கள் என்று சொல்லு கிறார். அதை உற்று நோக்குமிடத்து 1938-ம் வருஷத்தில் விவசாயிகள் கடன் நிவாரண மசோதா என்று கொண்டு வரப்பட்டு மிராஸ்தார்கள் மாத்திரம் நன்மை அடைந்ததைப் போலவே புதிய சட்டத்தில் மிராஸ் தாருக்கு மாத்திரம் பாதுகாப்பு வந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. ஆகையால் அந்த மாதிரி இல்லாமல் விவசாயிகளுக்கே அதனுடைய முழுப் பயன் கிடைக்கவேண்டுமென்றே நிலைமையை சர்க்கார் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். .இந்த மாதிரியான சிக் கல்கள் வரும்போது வக்கீல்கள் பலவிதமான சட்டப் பிரச்னைகளை வைத்துக் கொண்டு அவர்கள் பல விவாதத்திற்கு இடம் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த மாதிரியான சிக்கலான நிலைமையை கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் அந்த மாதிரி செலவு செய்து கோர்ட்டுக்கு வந்து தன்னை விவசாயி என்றோ நிலம் இருக்கிறவன் என்றோ lessee என்றோ சொல்லிக்கொண்டு வாதாடுவதற்கு முடியாது. விவசாயிகள் 50, 100 கடன் வாங்கியதும் இந்தக் கோர்ட்டுச் செல வுக்கே சரியாகப் போய்விடும். ஆகையால் அதிகமான நிலம் வைத்திருக் காத ஏழை எளிய விவசாயிகள் மட்டும் பயன் அடையக் கூடிய முறையில் இந்த மசோதா இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு சில திருத்தங் களுடன் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்."

SRI K. V. RAMASAMY :—" கனம் உதவி சபா நாயகர் அவர் களே, தற்சமயம் இந்தச் சபையில் விவாதத்திலிருக்கும் இந்தச் சட்டம் எதைக் காட்டுகிறது? பத்து வருஷங்களுக்கு மேலாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் கடன் பட்டுத் தத்தளித்துக்கொண்டிருக்கக் கூடிய நிலைமையில் தங்களுக்கு கடன் நிவாரணம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நியாயமானது. அந்தக் கோரிக் கைக்கு ஏதாவது செவி சாய்க்கவேண்டுமென்ற எண்ணத்தை இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவானது காட்டுகிறது.

11-53 a.m. " இந்த மசோதாவில் பல குறைபாடுகள் இருந்தாலுங்கூட மொத்தத்தில் பார்க்கும்போது ஸ்ரீ B. V. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்கிறபடி, கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறந்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, நிச்சயமாக நிவாரணமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, கடனிலே துவண்டு கொண்டிருக்கக் கூடிய விவசாயிகள் சார்பிலே இந்த மசோதாவை நான் வரவேற்கின்றேன்.

" இந்த நிலைமையில், விவசாயிகள் யார் என்பதற்கு சர்க்கார் விளக் கம் கொடுக்கிறது. அந்த விளக்கம் அவ்வளவு சரியானது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். விவசாயி என்கிறபோது, அதற்கு கொடுத் திருக்கிற வியாக்கியானம் சாதாரண விவசாயிகளோடு நில்லாமல், மிகப் பெரிய நிலப் பிரபுக்களுக்குக் கூட, இதிலே சாதகம் இருக்கிறதென்பது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அதே சமயத்தில் சர்க்கார் தரப்பிலிருந்து ஒரு திருத்தம் வந்திருக்கிறது. அந்தத் திருத்தம் கூட வரவேற்கத்தக்க ஒரு திருத்தம் தான். விவசாயிகள் என்கிறபோது, ' who is in receipt of rents or profits thereof ' என்பதை மாற்றிவிட்டு, 'who pays rent and receives wages' என்கிற வார்த்தைகளை சர்க்கார் போட்டிருந்தால் இன்னும் உதவிகரமாக

11th January 1954] [Sri K. V. Ramasamy]

இருந்திருக்கும். அப்படிச் செய்திருந்தால், சாதாரண விவசாயிகளுக்கும் கூலி விவசாயிகளுக்கும் நிச்சயமாக உதவியாக இருக்குமென்று நான் சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

" ரூ. 250-க்கு மேல் நிலவரி கொடுக்கக் கூடியவர்கள் விவசாயிகள் என்று கருதப்படக் கூடாது என்கின்ற ஷரத்து சேர்க்கப்படுவது அவசியம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

" 1951-52, 1952-53 அல்லது 1953-54 வருஷங்களில் வருமான வரி தருபவர் என்று நிர்ணயிக்கப்பட்டவர்கள் இந்த சட்ட வரம்பிற்குட் பட்டு விவசாயி என்ற வியாக்கியானத்திற்குள் வரமாட்டார்களென்று இருக் கிற திருத்தம் நியாயமானது, சரியானது. ஆகவே, அதை வரவேற்கிறேன்.

" கிராமப் புரங்களில் காலையிலிருந்து மாலை வரை வெய்யிலிலே வேலை செய்யக்கூடிய விவசாயக் கூலிகளாகிய அவர்களுக்கு இதனால் எந்த விதமான நிவாரணமும் கிடையாது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராஜா சிதம்பரம் அவர்கள் சொன்னார், தங்களுடைய நாணயத்தை வைத் துக்கொண்டுதான் கிராமப்புரங்களில் வாழ்கின்றார்கள் என்று அவர் களுக்கு எந்த விதமான நிலபுலனும் இல்லாவிட்டாலுங் கூட, அவர் களுடைய நாணயத்தின் பேரில் இன்றைக்கு அவர்கள் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்குப் பல நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. மாடு கன்றுகள் வைத்திருந்தாலுங்கூட, அவைகளை ஜப்தி செய்யப்படும்படியான பல தொந்தரவுகள் இருக்கின்றன. எனவே, விவ சாயத் தொழிலாளிகளாக இருக்கக்கூடியவர்களுக்குக் கூட நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையில் சட்டத்தில் அவர்களுக்கு சாதகம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

" இந்தக் கடன் ஒத்திவைப்பானது ஒரு வருஷத்திற்கு என்று இருக் கிறது. இது நிச்சயமாகப் போதாது. ஐந்து வருஷமாவது தவணை கொடுக் கப்படவேண்டும். குறைந்த பக்ஷம் மூன்று வருஷமாவது தவணை கொடுக் கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

" இந்த நிவாரணம் உண்மையில் விவசாயிகளுக்கு பயன்பட வேண்டு மானால், நிச்சயமாக சர்க்கார் அவர்களுக்கு கடன் வாங்க வசதி செய்து கொடுக்கவேண்டும். இன்றைக்கு சட்டம் வந்து விட்டது. அதனால் கிரா மத்தில் லேவாதேவிக்காரர்கள் உஷாராக இருக்கிறார்கள். அவர்களிட மிருந்து கடன் வாங்குவதற்கு முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். நிலம் சாகுபடி செய்பவன் மாடு கன்றுகளை வாங்கவேண்டும், உழு படைகளை வாங்கவேண்டும். இதற்காக கடன் வாங்குவதற்கு விவசாயிகள் செல்லுகின்றபோது, கிராமப்புரத்தில் இருக்கக்கூடிய லேவாதேவிக்காரர் கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். நிலத்தைக் கிரயம் எழுதிக்கொடுத் தால்தான் பணம் கொடுப்பேன் என்று லேவாதேவிக்காரர்கள் சொல்லு கிறார்கள். ஏன் சொல்லுகிறார்களென்றால், இந்தச் சட்டம் வந்ததுதான் காரணம். இந்தச் சட்டத்தினால் இப்படிப்பட்ட ஒரு கஷ்டம் விவசாயி களுக்குப் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. எனவே, கிராமப் புரங்களில் இருக் கக்கூடிய விவசாயிகளுக்கு தக்காவிக் கடன் முதலியன கூட்டுறவு சங்கங் களின் மூலமாக போதிய அளவுக்கு கடன் வசதி செய்து தருவதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

*SRI S. VENKATRAMA AYYAR:—" Mr. Deputy Speaker, Sir, I feel that the Ordinance which was promulgated recently 12 noon. was timely and opportune. There cannot be two opinions in the matter of affording relief to the agriculturists of our State. We are grateful to our Government with our Hon. Chief Minister at its head, who have come forward with a number of such relief measures in quick succession. To start with, we had the Tanjore Pannaiyals and Tenants Protection Act and it has been subsequently extended to South Arcot, then the South Kanara Tenants Protection Act and recently we had the Malabar Tenancy Act.

Now we have the Bill for affording temporary relief to indebted agriculturists. I am sure all this is a forerunner to a future comprehensive land reform legislation. Of course, these are done with a view to render all possible help and afford relief to the agriculturists and with a view to stabilise our agricultural economy and step up food production. On a first reading, we had a doubt whether this measure is at all necessary for a deltaic area like Tanjore district, but on a careful consideration and deep thought over the implication of the Bill, we are convinced that this measure is immensely beneficial, especially at a time when the agriculturists of the coastal regions in Tanjore district, comprising several taluks, were afflicted by the cyclone in November-December 1952. They had to borrow heavily not only from other creditors, but also from Government. They had lost all their paddy and there had been great devastation of coconut topes in that area. It necessitated heavy borrowing. Of course, Government gave a helping hand in advancing loans promptly to afflicted agriculturists. I am, therefore, constrained to point out to the Government that suitable provisions will have to be incorporated at least for postponing recovery of all such loans. I know that, Government administration will have to be carried on with the receipts of land revenue and other taxes. But as a special and exceptional case, recovery of these loans may be postponed, as also the accumulated arrears of rent in the inam and zamin villages recently taken over. The accumulation of arrears relate to the last three years or so. It is not due to the apathy on the part of the ryots to pay rents, but to other causes. There are writs pending in the High Court and there are also repeated representations to the Government to reduce the rates of rent which stood at the highest district level, to that of the taluk highest rate. After considerable time, Government were pleased to pass favourable orders making rent reduction. But all at once when the ryots are asked to pay, they find it difficult. I, therefore, request that suitable provisions may be made in the Bill itself to enable ryots to pay in easy instalments, spread over two or three years. It may be said by the Government that suitable instructions have been issued to the Collector and other Revenue authorities to deal with cases of real hardship. I submit no amount of executive instructions will be of any use. If such a provision is made in the Bill itself, it will confer lasting benefit to the afflicted ryots.

" Regarding the definition of ' agriculturist ', a mirasdar who owns several hundreds of acres of land, having no other business and having agriculture as his occupation, borrows heavily not with a view to improve his agricultural operations, but for various purposes, like marriages, purchase of excellent cars and so on. If they are also given the benefit under this Act, I am afraid, it will not be taken in the spirit with which the Act is intended to provide relief to the agriculturists. In such cases, suitable provision should be made excluding such agriculturists from the benefits under this Act.

11th January 1954] [Sri S. Venkatrama Ayyar]

"Suitable provision should also be made in connexion with debts due to women who have absolutely no other means of lievlihood except the loans advanced to agriculturists.

"I plead and request the Government to come forward with a comprehensive land legislation at a very early date so that the agricultural economy of our State may be developed to its utmost extent."

SRI D. K. RAJU:—"Sir, the Bill is an important one, because it affords relief to the agriculturists who are the backbones of the State. But I do not know why it is being hurried through like this. First of all, instead of taking the House, into confidence an ordinance was promulgated; again, instead of introducing the Bill in the beginning of the Session, it was delayed and now on the pretext of Pongal, this measure is being hurried through. However, I am glad that the Hon. Chief Minister is trying to concede the points raised by the Opposition Party to a very great extent. In spite of all that, I feel there was no need to promulgate an Ordinance and now pass the law in a hurry.

"Many hon. Members suggested that the Bill be referred to a Select Committee for scrutiny and opinion. Before that, public opinion ought to have been obtained. Nothing of the kind has been done.

"Hon. Members know that the majority of the agriculturists depend on loans either from banks, or from petty money-lenders. Because of this measure, the relationship between the money-lender and the agriculturist has become strained. Unless the relationship between the agriculturist and the money-lenders is kept cordial, there will not be any real relief to agriculturists. Apart from this, as far as my knowledge goes, in foreign countries which are supposed to be forward countries, there are no such measures to help the ryots in an indirect way. Government should help the ryots in a direct way by starting Credit Loan Societies, for, this kind of indirect help only jeopardises the credit of the agriculturist.

"Of course, any legislation has two phases, good and bad. But in my opinion such a Bill passed into law so hurriedly will do more bad than good. So, I request the House not to hurry like this, for, the promulgation of the Ordinance and the way in which the Bill was delayed in the beginning and rushed through now have created a suspicion in the minds of the public and the Members of the Opposition Benches. So I request the Hon. Chief Minister to see that at least in future, he takes the Members of the House into confidence in carrying on legislative business, so that cordiality may be maintained between Government and Opposition."

* SRI M. MUNI REDDY:—"Mr. Deputy Speaker, Sir, several Members have spoken for and against the Bill and criticised the 12-10 p.m.

Government for having hurriedly rushing through this Bill. There is no alternative for us than to agree with the Government when they say that they want to pass this Bill by this evening.

" **Whenever we meet people,** they say that this Act will not be helpful to them. Already debtors are executing not only conditional deeds but also sale deeds. The Government will have to give loans more liberally to ryots, and the result will be that corruption will increase in all taluk offices. The Hon. Chief Minister was kind enough to concede to very many demands. But there are still three important amendments that are to be conceded. If they also are accepted by the Government, Mr. Swayamprakasam has agreed to the passage of the Bill by this evening. My amendments are very important and simple. I do not know why the Hon. Chief Minister has not taken notice of them. Perhaps they escaped his notice. One of my amendments proposed is to exempt from the operation of this Act ' any sum due to a widow or woman who does not subsist on the maintenance of her husband and who does not own any immovable property other than a dwelling house '. There may be widows or other women who have lent to agriculturists from the money that they might have got for their maintenance either through the Court or otherwise and they may be actually living upon the interest that they get. They may be getting by way of interest two hundred or three hundred rupees and that may be just enough for their subsistence. Under this Act, they will not get the interest on the loans they have advanced to agriculturists. I request that the debts due to such women must be included in the list of exemptions from the operation of this Act.

" Even very big landlords, landlords who pay a land revenue of even Rs. 1,000 per year, are given the benefit under this Act. We must give the benefit only to small landlords. I think very many Members of this House will agree if the benefit is confined to those who pay a land revenue of Rs. 500 or less a year.

" As I have already said, moneylenders are not prepared to advance loans to agriculturists. So the agriculturists cannot maintain themselves and carry on agricultural operations. To induce money-lenders to lend to agriculturists at least for carrying on their agricultural operations, I have moved an amendment for exempting from the operation of this Act any debt that might be incurred after this Act comes into force. Co-operative credit societies are not prepared to give loans liberally to ryots. I request the Government to see that the ryots are given long-term loans. If a person applies to the Land Mortgage Bank for a loan, it takes three years to get it sanctioned. For a loan of Rs. 1,000, the applicant has to spend about Rs. 300. Under these circumstances, this Bill will not be helpful to ryots. If the amendments relating to the three subjects that I have referred to are accepted, the Bill can be rushed through and got approved by this House."

11th January 1954]

*SRI K. S. LAKSHMIPATHI NAICKER :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு உடனடியாக உதவியளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதாவானது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை நான் மனமார ஆதரிக்கின்றேன். அதில் முக்கியமான சில அம்சங்களை திருத்தியமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன். 12-16 p.m.

" அநேக வருஷங்களாக மழை இல்லாது விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு உடனடியாக உதவியளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது உண்மையில் எவ்வளவு தூரம் பலனளிக்கப் போகிறது என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இவ்வளவு அவசரமாகவும், இவ்வளவு வேகமான முறையிலும் இந்த மசோதா 'பாஸ்' செய்யப்படக்கூடாதென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிக நேரம் கொடுத்து, முக்கியமான திருத்தங்களை அங்கீகாரம் செய்து, இதை நிறைவேற்றவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமாகும்.

" முக்கியமாக, எஸ்டேட் ஒழிப்புக்குப் பின்னால், 'survey' ஆகாத எஸ்டேட்டுகளில் நில அடமான பாங்குகளோ அல்லது இதர கடன் வாங்கக்கூடிய ஸ்தாபனங்களோ உதவியளிப்பதில்லை. அந்தக் கிராமங்களிலுள்ள விவசாயிகள், பக்கத்திலுள்ள விவசாயி மக்களிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ளுகிறார்கள். விவசாயிகள்தான் இங்கு 'creditors' ளாக மாறுகிறார்கள். நில அடமான பாங்குகளிலிருந்து எந்தவித உதவியும் கிடைப்பதில்லை. காரணமென்னவென்றால், அந்தக் கிராமங்களில் சர்வே ஆகாததினால் நில அடமான பாங்குகள் கடன் கொடுக்க முன் வருவதில்லை. இப்பொழுது நடைமுறையில் என்ன செய்துகொண்டு இருக்கிறார்களென்றால், அடுத்தபடியாக இருக்கும் விவசாயிகளிடத்திலிருந்து கடன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கடன் மசோதா வந்ததற்குப் பின்னால், ரூ. 100 கடன் பெற வேண்டுமானால், ரூ. 200-க்கு எழுதிகொடுத்தால்தான் ரூ. 100 கொடுக்கிறார்கள். இதுவரையில் கிடைத்துக்கொண்டுவந்த கடனும், இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால், கிடைக்காதபடி ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு தூரம் இந்தச் சட்டமானது பலனளிக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ அவ்வளவு தூரம் பலன் அளிக்காது என்றுதான் நான் அஞ்சுகின்றேன். அதற்காக சர்க்கார் ஏராளமான பண உதவியை கிராமங்களுக்கு அவ்வப்போது தேவையானபோது கொடுக்கவேண்டும். விவசாயிகள் அன்றாட வாழ்க்கைச் செலவுக்குக்கூட இனி கடன் வாங்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். வருகிற பொங்கலுக்குக்கூட அவர்கள் கையில் பணமில்லாமல் கடன் வாங்க முடியாத நிலையில் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே சமீபத்தில் வருகின்ற பொங்கல் பண்டிகையை சரியாகக் கொண்டாட முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

" எஸ்டேட் ஒழிப்புக்குப் பின்னால் கடன் வாங்குவது என்றால் அதிகப்படியான தொகைக்கு எழுதிக்கொடுத்துதான் வாங்கவேண்டியிருக்கிறது. அதிலும் சில பேர்கள் தங்கள் குடும்பத்திலே இருக்கக்கூடிய நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விடும்போது, ரிஜிஸ்திரார் மூலமாக குத்தகைபதிவு செய்யாமல் 'pro-note' எழுதி வாங்கிக்கொண்டு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த குத்தகைப் பணத்தை வாங்கிக்கொண்டு குடும்பத்தை நடத்தி வருகிறார்கள். உண்மையில் அந்த நிலைமையில் இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு இப்பொழுது வரக்கூடிய சட்டமானது எந்த விதமான உதவியையும் அளிக்குமென்று தெரியவில்லை. முச்சியமாக அது உதவியளிப்பதற்கு பதிலாக கெடுதல்தான் செய்யும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். கிராமங்களிலே ஒரு வருஷத்திற்கு தங்களுடைய நிலங்களை குத்தகைக்கு அடைப்பவர்கள் 'pro-note' மூலமாக அடைத்து வருகிறார்கள். 'pro-note' மூலம் அடைத்து அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு ஜீவனம் நடத்துகிறார்கள். கிராமங்களில் 'Capitalist'

ஆக இருக்கக்கூடியவர்களும், அந்தக் கிராமங்களில் "**Creditors**" ஆக இருக்கக்கூடியவர்களும் விவசாயிகள்தான். அவர்களுக்குத் திரும்பி வரவேண்டிய பணம் திரும்பக் கிடைக்காவிட்டால், அவர்கள் எப்படி விவசாயத்தைச் செய்ய முடியும் ? அவர்களுடைய விவசாயத்தை இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை சர்க்கார் யோசிக்கவேண்டும். சர்க்கார் உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மையைச் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பது எப்படி சாத்தியமாகும் ? இதைச் சர்க்கார் யோசனை செய்து பார்க்கவேண்டும்.

"தனிப்பட்டவர்களுடைய (சர்க்கார் அல்லாத)—கடனை மட்டும்—ஒத்தி வைக்கவேண்டுமென்று சர்க்கார் இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. 'மற்றவர்களுக்கு கொடுக்கவேண்டாம், எங்களுடைய கடனை மட்டும் கொடுங்கள்' என்று சொல்வதுபோல் இருக்கிறது. ஆகவே, சர்க்கார் தக்காவிக் கடன், கால்நடைத் தீவனத்திற்கான கடன் (**Fodder Loan**) இம்மாதிரியான கடன்களைக் கொடுத்து உதவியிருப்பதையும் இதில் சேர்த்து, இதில் பலன் அளிக்கும்படியாக அவர்கள் ஒத்தாசை செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் '**Survey**' ஆகாத எஸ்டேட் ஒழிப்பு இடங்களில் இந்த கடன்களை பெற்றுள்ளவர்களுக்கு வாஸ்தவத்திலேயே உண்மையான பலனளித்ததாகச் சொல்ல முடியும். ஆகவே, இப்பொழுது இருக்கக்கூடிய இந்த மசோதாவில் சர்க்காருடைய கடன்களையும் ஒத்திவைப்பதற்கு அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படிச் செய்ய அவர்கள் முன்வந்தால்தான் உண்மையிலேயே விவசாயிகளுக்கு உதவியளிக்கக்கூடிய நிலைமை இருக்கலாமேயொழிய, தனிப்பட்டவர்களுடைய கடனை மட்டும் ஒத்தி வைத்திருப்பதினால் அதிக பலன் ஏற்பட முடியாது. ஆகையால், இதை சர்க்கார் தங்களுடைய கருத்தில் வைத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய மாறுதல்களைச் செய்து, இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"இந்த மசோதாவானது நடைமுறையில் மிகவும் கெடுதல் செய்யும் என்பதையும் சொல்லிக்கொள்ளுகின்றேன். அதிக நேரம் கொடுத்து, மற்ற அங்கத்தினர்களுக்கும் போதிய அவகாசம் அளித்து, இந்த மசோதாவைப் பூரணமாகப் பரிசீலனை செய்து சட்டமாக நிறைவேற்றவேண்டுமேயொழிய, அவசரம் அவசரமாக நிறைவேற்றுவது அவ்வளவு நல்லது அல்ல என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்."

12-20 p.m. * **Sri G. NARAYANASWAMI NAIDU** :—"கனம் தலைவரவர்களே ! விவசாயிகளுக்காக சமீபத்தில், சர்க்கார் கொண்டுவந்திருக்கும், 'விவசாயிகள் கடன் ஒத்திவைப்பு சட்டத்தை' நான் ஆதரிக்கிறேன். இந்த சட்டம், காலத்தில் செய்த உதவி எனவும் கருதுகிறேன். எதிர்பாராமல் யாரும் கேட்காமல் சர்க்காரே இதைச் செய்துள்ளார்கள் என்பதைக் கொண்டும் இதைப் பாராட்டுகிறேன். தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் கொண்டுவந்த உடன் கனம் பிரதம மந்திரி அவர்கள் தன் ஜில்லா சுற்றுப் பிரயாணத்தை சீர்காழியில் முடித்து பிளாட்பாரத்தில் ரயில் வரவுக்காக தங்கி இருக்கும்போது, என்னை அழைத்து எல்லாம் திருப்திதானே என்று கேட்டார்கள். பரம திருப்தி. ஆனால், கடன் தொல்லை கடுமையாக இருக்கின்றது என்று தெரிவித்தேன், கனம் பிரதமர் அவர்கள் இத்துடன் இப்பொழுது திருப்தி அடையுங்கள் என்று தெரிவித்தார்கள். ஆனால் இந்த சட்டம் சீக்கிரத்திலேயே, ஜனனம் ஆகி விட்டது மகிழ்ச்சிக்குறிய விஷயமாகும்.

"தொழிலாளர்களிடை நீண்டகாலமாக வேலை செய்த நாங்கள், விவசாயத் தொழிலாளரின் கடன், அதை அவர்கள் பெற்றுக்கொண்ட விதம், பல ஆண்டுகளாக, நீண்டு, நீண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு புதிய 1 அணா தலையை ஒட்டிக்கொண்டு முதலைப்போல் பல மடங்கு பெருகி, உழவர்களை சதா அச்சுறுத்தி, திகிலையும், என்ன நேருமோ,

என்ற ஏக்கத்தையும் தந்த இந்த சனியன் அடியோடு துலையாமல், ஒரு வருஷம் கழித்து வட்டியும் முதலும் சோந்து கோர சுரூபம் எடுக்கப் போகின்றது என்றால் அதுவும் பெரிய திகிலாய் இருக்கிறது.

" உழவர் கோருவது கடன் ஒத்திவைப்பல்ல, கடன் ஒழிப்புதான் என்பதை அழுத்தமாக சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

" விவசாயி, என்றால் உழவர், என்று தான் பொருள். ஆனால் நிலச்சுவான்தாரும் இதில் சேர்ந்தவர் என்றால் எதிர்ப்பு கடுமையாகிறது. உழவர், குறிப்பிட்ட அளவு குறைந்த நிலம் வைத்திருப்பவர், வாரம் அல்லது சிறு குத்தகைகாரரர் இவர்களுக்கு கடன் ஒழிப்பும், மற்றையோர்க்கு கடன் ஒத்திவைப்பும் அளித்தால் போதுமானது என்று கருதுகிறேன். இதை சர்க்கார் நன்றாக பரிசீலனை செய்யவேண்டுமென்றும் விரும்பு கின்றேன்.

" சட்டத்தை எவ்வளவு ஜாக்கிரதையாய் செய்தாலும் எங்கள் ஜில்லா வாசிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கடன் ஒத்தி வைப்பு சட்டம் வந்த உடன் இந்த திருவாடுதுறை பண்டாரம் என்ன செய்தார் என்பது ஒரு வேடிக்கை. ஒரு குடியானவர் பக்கிரி படையாச்சி என்று பெயர் பாரம்பர்யமாக பண்டாரங்களுக்கு பணி செய்தவர். அவர் நீண்ட நாள் குடிகளுக்கு பாதகமாக, பண்டாரத்திற்கு ஆதரவாக, நடந்தமைக்கு பரிசாக, அவர் மாடி வீட்டை இடிக்கவேண்டுமென்று கோர்டில் தாவா நடந்து வருகிறது. குடியானவர், தனக்கு சேரவேண்டிய சம்பள பாக்கிக்காக முன்சீப் கோர்ட்டில் தாவா செய்திருந்தார். இந்த கடன் ஒத்திவைப்பு சட்டம் வந்த உடன், பிரஸ்தாப பண்டாரம் தான் விவசாயி ஆனதால், பிரஸ்தாப தாவாவை ஒத்திவைக்க வேண்டுமென்று கோர்ட்டாரை கோறி இருக்கிறார்.

" இப்படிப்பட்டவர்களுக்காகவா சட்டம்கொண்டுவரப்பட்டது? எங்கள் ஜில்லாவில், ஒரு பழமொழி உண்டு, ' எட்டுக்' குடியான் சம்பாதிக்க, வேதாரண்ணியத்தான் தின்று பார்க்க" என்று கூறுவார்கள். அதே போல், நம்முடைய முன்னோர்கள், நல்ல எண்ணத்தின் காரணமாக லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை, கடவுளின் பேரால் அளித்து ஏழை மக்களுக்கு உதவி செய்யச் சொன்னால், இப்பண்டாரங்கள் விஸ்கி விநாயகர்க்கும், பிராந்தியைப் பெருமாளுக்கும் நிவேதித்து லேடிமார்களுக்கு மாடி வீடு கட்டிக் கொடுத்து, ஆஸ்திக வேஷம் போட்டு பல டாம்பீகக்கார்களில், பவனி வந்து உழைத்த கூலியை கொடு என்றால், டிஸம்பர் மாதம் வரை கெடு கேட்கவா இந்த சட்டம் பயன்படவேண்டும்.

" இது கடவுளின் அடியார்களான வேஷதாரிகள் எண்ணத்தில் நல்ல நோக்கு இல்லாமல், மாநாடுகளும் மதநாடுகளும், கூட்டி ஆஸ்திகர்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும்போது, கோவிலில் டிரஸ்டிகள், எக்ஸிகூடிவ் ஆபீஸர்கள் என்ற பேரால், குட்டிப்பண்டாரங்கள் குடிகளை கடன்களின் பேரால் செய்யும் இம்சையும், வக்கில்மார்களுடன் பங்கு போட்டுக்கொண்டு தொடுக்கும் விவஹாரங்களும், தயை செய்து துப்பறியும் போலீசாரையாவது அனுப்பி, மயூரநாதஸ்வாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த மன்னமந்தலையாவது, பந்தநல்லூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிறுகடம்பூரையாவது விசாரித்தால், பழைய கடன்கள் பேரால், குடிகள் எவ்வளவு இம்சைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது தெரியும்.

" கோயில் நிர்வாகத்தில் பெரும்பாலும் இருப்பவர்கள் ஆஸ்திக விரோதிகள் ; கண்ணால் கடவுளைப் பார்க்க உரிமை பெறாதகுடிகள் ; உழைத்து உழைத்து ஓடாய் போய், சம்பாதித்துக் கொடுத்த செல்வத்தால் கடவுள்களும் அதனால் கூலிபெறும் நிர்வாஹ உத்தியோகஸ்தர்களும் கடன்களின் பேரால் குடிகளைச் செய்யும் கொடுமை மிக மிகக் கடுமை. எங்கள் ஜில்லாவிலுள்ள கடவுளெல்லாம் பெரிய நிலச்சுவான்தார் என்று ஏற்கெனவே இந்த சபையில் கூறியுள்ளேன்.

" இந்தக் கடவுளெல்லாம், தங்கள் கடனை எல்லாம் நீக்கிக் கொண்டு, ஓரளவு பெரிய பணமுடைய, பணக்காரசாமிகளாகவும் ஆகி உள்ளது.

[Sri G. Narayanaswami Naidu] [11th January 1954

பல சுவாமிகள், ஆடை புதிப்பித்துக்கிக்கொண்டது. சில ஆபரணங்கள் செய்து கொண்டது. சில வாகனத்திற்கு வர்ணம் இட்டுக்கொண்டது. சில வாங்கிக்கொண்டது. சில மதிள் எழுப்பிக்கொண்டது. சில கோபுரம் புதுப்பித்துக்கொண்டது, கட்டியும் கொண்டது. ஆனால் இவ்வளவு சிலவும் செய்துகொண்டும், முதலும் வைத்துக்கொண்டிருக்கிறது. நமது என்டோவ்மென்டு மந்திரி அவர்கள் மனமுவந்து ஒவ்வொரு கோவிலுக்கும் சமீப பத்து வருஷங்களில், என்ன புதிய காரியங்களை செய்துகொண்டு எத்தனை லட்சம் முதல் வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை கணக்குக் கொடுத்தால், சுவாமிகளுக்கு சேர்ந்திருக்கும் முதல் எவ்வளவு என்பது சபையோருக்குத் தெரியும். துடர்ந்து வரும் வருஷங்கள் மேலும் பணத்தை குவிக்கப்போகிறது. ஏற்கனவே குத்தகைதாரர் பிழைக்க குறைச்சல் குத்தகை. குத்தகைதாரர் குடிகளிடம் வாங்கிய குத்தகையை கடவுளுக்கு நேரில் குடிகள் கொடுக்க நமது பாதுகாப்பு சட்டம் செய்யப்போவதால், இன்னும் ஐந்து வருஷங்களில் தஞ்சை ஜில்லாவில் உள்ள கோவில்களெல்லாம் பல, பல, லட்சம் பணம் முதல் கொண்ட கோவில்களாக மாறிவிடும்.

" ஆனால் ஏழை பங்காளன் என்ற அந்த கடவுள் வாகனம், ஆபரணம், மதில், கோபுரம்—இவ்வளவும் புதுப்பித்துக் கொள்ளவும், முதல் சேர்க்கவும் வாய்ப்பளித்த, குடிகள் என்ன நிலையில் உள்ளார்கள் ! கட்டின வீடு, வைத்த மரம் இவைகள் · நாசமாவதைத்தான் காண்கிறார்கள். கடனால் மேலும், மேலும் தொந்தரவுக்குத் தான் ஆளாகிறார்கள். நன்றி மறப்பது நன்றன்று என்பது இதற்குத்தானா? கடவுளுக்கு வேண்டாமா ? இவ்வளவு வசதி செய்து கொடுத்த தன் குடிகள் பயமுறுத்தல் இல்லாது, குடியிருக்க, கொல்லையில் வைத்த மரங்களை அனுபவிக்க, இடுப்பார உடுக்க, வயிரார சாப்பிடச் செய்தால் அல்லவா இறை வணக்கம், ஆஸ்திகத்தன்மை மேம்படும், ஊரை ஏமாற்றும் எத்தர்கள், பல்லக்கில் பவனிவர, பக்தி அற்றவர்கள் கூலிக்காக பாட்டுப்பாடுவதினாலா, ஆஸ்திகம் பெருகும், ஏழை மக்களுக்கு அன்னரூபமாகத்தான் கடவுள் பிரத்யட்சமாகிறார் என்ற காந்தி அடிகளின் வார்த்தையை, உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன் எந்த சட்டத்தையும் ஏழை மக்களுக்கு எதிராக் கொள்ளுவதில் வல்லவர்கள், நில பிரபுக்கள் இந்த நாட்டில் விவஹாரம், பெருத்த, ஜில்லாவில், எங்கள் ஜில்லாவும் ஒன்று. முனிசீப் கோர்ட், அடிஷனல் முனிசீப் கோர்ட், ஸப்-கோர்ட், அடிஷனல் சப்-கோர்ட், ஒரு தாலூகாவில் இரண்டு இடங்களில் முனிசிப் கோர்ட்கள் நிறைந்த ஜில்லா, எங்கள் வளமிக்க தஞ்சை ஜில்லா நடந்தால் தெருவெல்லாம், ஒன்று காபி கிளப் போர்டுகளும் இல்லாவிட்டால், **B.A., B.L., M.A., B.L.** போர்டுகளாகத்தான் காட்சி அளிக்கும். எங்கள் ஜில்லாவுக்காக எந்த சட்டம் வந்தாலும் உடனே கும்பகோணம் வக்கீல்மார்கள் அந்த சட்டத்தை அணுவணுவாக பிளந்து, அதனால் நிலச்சுவான்தார்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை பூதக்கண்ணாடி போட்டு பெரிதாக்கி விளம்பரம் செய்வார்கள் உடனே சென்னை பத்திரிகைகள் 6 பத்தி தலைப்புக் கொடுத்து உற்பத்தி குறைந்து விடும் என்று பயமுறுத்தும். இது வெறும் பத்திரிகை பிரசாரம். மிராசுதார், 100 பெயர் கூடி கூட்டம் நடத்தினால் ஆயிரக்கணக்கான மிராசுதார்களும், பல ஆயிரம் பார்வையாளரும் கூடி புதிதாக வந்த சட்டத்தை ஷரா வாரியாக திருத்த வேண்டுமென்று, அழுத்தமாக பேசியதாக ஆறுபத்தி தலைப்பு கொடுத்து அரசாங்கத்தை அச்சுறுத்த ஆரம்பிக்கும். இல்லாவிட்டால் விவஹாரம் சரியாக இல்லாவிட்டால், அதிகாரிகளை சரிக்கட்டி காரியத்தை சாதித்துக் கொள்வார்கள் நிலச்சுவான்தார்கள். சமீபத்தில், தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டத்தை எவ்வளவு சாதகமாக, எங்கள் நிலச்சுவான்கள் பயன் படுத்தி உள்ளார்கள் என்பது நேற்றைய சர்க்கார் அறிக்கையிலிருந்து சபையோருக்கு தெரிந்திருக்கலாம். சமரஸ அதிகாரிகள் பழைய கோட்டை அணிய முடியாத நிலைக்கு வந்து விட்டார்கள். மந்திரிகள் காங்கிரஸ் தலைவர்கள் பார்லிமெண்டு அங்கத்தினர்கள், மாஜி மந்திரிகள் அடங்கிய பிரம்மாண்ட மகாநாட்டில் சமரஸ அதிகாரியின் எச்சல் புத்தியை, விளக்கி தீர்மானம் நிறைவேற்றினோம். முடிவு ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாப்பாள்,

ஒரு தாலூகாவில் . அக்ரமம் செய்தவர், பல தாலூகாவுக்கு தன் மனு நீதியைச் செலுத்த உயர்த்தப்பட்டு விட்டார், ஜன நாயகத்திற்கு எங்கள் ஜில்லா அதிகாரிகள் கொடுக்கும் மதிப்பு இவ்வளவு தான்.

"மேலும் இருக்கும் ரெவினியூ கோர்ட்டாரை சரிக்கட்டி, ஆறங்க மாஞு நாடுகள் வள்ளுவர் வகுத்த வழியை, வையகத்தார் தெரிந்துகொள்ள மாநாடுகள், மூவர், தேவர், நாயன்மார் திருநட்சத்திர, பன்னிருவர் பாசுர, திருப்பாவை, திருவெம்பாவை மகாநாட்டுத் தலைமையில், மந்திரிகளுக்கு பதிலாக, அதிகாரிகள் தலைமையில் மாநாடுகள் நடத்தி, அருட் செங்கோல் மூலையினால், ஒளி விடும், சில கதிர்களை வீசி, குடியானவர் கோறிக்கைகள், குட்டிச்சுவராக்கப்படுகிறது. இது, வானையும் மண்ணையும் ஒரு காவி வஸ்திரத்தால் ஆளும் மகா பெரிய பண்டாரங்கள் செய்யும் வேடிக்கை. இலை நிறைய சோறிட்டால் கடவுளே நன்ருய் இருக்கணும் என்று சொல்லி திருப்தியுடன் சாப்பிடுவான். ஏழை பட்டினியினால் வாழும் உழவனே, பாழாய்போன கடவுள் பட்டினி போட்டுக் கொல்கிருனே என்று நிந்திப்பான். ஆஸ்திகம் பெருக விரும்பினால் படித்த கூட்டத் திற்கு எதிரில் பாசுரம் பாடிக்கொண்டிராமல் பாமரமக்கள், அதிலும் கோயிலுக்கு விருது தூக்கி, வாகனமெடுத்து குளம் வெட்டி கோபுர மெழுப்பிய அந்த உத்தம உழவர்களின் கடனை, பாரம்பர்யமாக வந்த கடனை நீக்கி விடுதலை செய்யுங்கள்.

"பண்டாரம் கொடுக்கவேண்டிய கடனை தவணை சொல்ல சட்டம் இடம் கொடுக்காமல், சாகுபடி சம்மந்தமான பாக்கிகளை ஒரு வருஷ மென்று ஒத்தி வைக்காமல், ஒழித்துக் கட்டுவதுதான் நல்லது. ஒத்தி வைப்பது 1 வருடமாக இல்லாமல் 10 வருடமானாலும் பரவா இல்லை. நாலுகால் கோமாரியும் இறங்கி 1 காலில் வந்ததைப்போல, ஆண்டு முடிவில், வட்டியும் முதலுமாக, கச்சேரியில் ஏறி வக்கிலுக்கும் தட்சணை யும் ஸ்டாம்புக்கு அர்ச்சனையும் செய்துகொண்டு பெருமாள் பெத்தபெருமா ளாவதில் என்ன லாபம். ஆதலால் 2 வேலி நிலத்திற்கு கீழ்பட்டவர்கள் கடனை பொதுவாக ஒழித்து அதற்கு மேலுள்ளவர்கள் கடனை ஒத்திவைப் பது நல்ல காரியம் என்பதை திரும்ப திரும்ப வற்புறுத்திக் கூறி இச்சட்டம் கொண்டு வரவேண்டுமென்று விரும்பிய சர்க்காருக்கு ஏழை மக்களின் சார்பாக நன்றி தெரிவித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்." 12–25 p.m.

SRI M. PALANIYANDI :—"கனம் உதவி சபா நாயகர் அவர் களே! எனக்கு முன்பு பேசிய நண்பர்களெல்லாம் இந்த கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தை எதிர்த்தும், வரவேற்றும் விளக்கமாக பேசினார்கள். ஆனால் மொத்தத்தில் பார்க்கும்போது இது ஏழை மக்களுக்கு மிகவும் கஷ்டத்தைத்தான் கொடுக்குமென்பதைச் சொல்ல முடியும். கனம் முதல் மந்திரி அவர்கள் காலையில் பேசிய காலத்தில் ஏதோ எதிர் கட்சி நண்பர் பலர் திருத்தங்களை கொடுத்து அதை மாற்றவேண்டுமென்று சொல்லு கிருர்கள் என்ருர்கள். கனம் ராஜா சிதம்பரம் அவர்கள் திருத்தக் கூடியதைத்தானே செய்யச் சொல்லுகிறோம் என்ருர்கள். அம்மாதிரி திருத்தக் கூடியதை திருத்தினால்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல திட்டம் செய்தவர்களாவோம். பெரும் மிராசுதாரர்களுக்கு நாம் சலுகை கொடுக்க வேண்டுமென்று நினைத்தால் மட்டும் போதாது. இம்மசோதா மூலம் நிலத்தை உழும் உண்மை விவசாயிகளுக்கே நிவா ரணம் அளிக்கப்பட வேண்டும். ஆகவே விவசாயத் தொழிலாளர்களுக்கு இவ்விதமான நோக்கங்கள் செய்யக் கூடிய நல்ல அம்சங்களுள்ள மசோ தாவை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் இந்த அரசாங்கத்தில், ஒரு வருஷக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை அமுல் செய்ய வேண்டுமென்று கொண்டு வந்து விட்டு, அரசாங்கத்தி னுடைய கடனை மட்டும் ஒத்திப் போடாதிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். ஏனென்ருல் நம் பிரதம மந்திரி அவர்கள் அரசாங்கக் கடனை ஒத்திப்போட்டால் அரசாங்கம், மற்ற கூட்டுறவு ஸ்தாபனம் முத லியவை நடை பெறுவது கஷ்டமென்று சொல்லுகிருர். அதுவும் ஓரளவு வாஸ்தவம்தான். ஆனால் அதே சமயத்தில் இந்த அரசாங்கம் தங்க

ளுடைய கடனையும் இரண்டாம் தடவையாக ஒத்திப்போடுவதால் நம் நாட்டிலுள்ள 10 கோடி விவசாய மக்களுக்கு பெரிய உதவி செய்தவர்களாவோம். அவர்களாலும் நம் அரசாங்கம் மிகவும் நல்ல அரசாங்கம் என்று பேசப்படும். மந்திரி சபையும், மற்றவர்களும் பெருமைப்படுவர். இவ்வாறு அரசாங்கக் கடனை சில ஆண்டுகளுக்கு ஒத்திப் போடுவதால் ஒன்றும் அது பாதிக்கப்படாது. ஆகவே இந்த அரசாங்கம் இதைக் கருத்தில் கொண்டு, ஏழை விவசாயிகளின் நிலையை உணர்ந்து அரசாங்கக் கடனையும் ஒத்திப்போடும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமென்றும் நினைக்கிறேன்.

" அடுத்தபடியாக, இந்த ராஜாஜி மந்திரிசபை பலவிதமான சட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. அடிப்படையை மாற்றாமல், பலவித சட்டங்களைச் செய்வதால் ஒருவித காரியத்தையும் சாதிக்க முடியாது. இன்றுள்ள நிலையிலே விவசாய மக்களுக்கு உதவியளிக்க முக்கியமாக கிராப் இன்சூரன்ஸ் (Crop Insurance) திட்டத்தை கொண்டு வரவேண்டும். விவசாயிகள் கடன் வாங்கி பணம்போட்டு பயிர் செய்கிறார்கள். ஆனால் தங்களுடைய நிலங்களில் விளைந்த பயிர்கள் பூச்சடிப்பதாலும், இன்னும் மற்ற பல காரணத்தாலும் பாதிக்கப்படலாம். அவர்களுக்கு இந்த (Crop Insurance) திட்டம் கொண்டு வந்தால் மிகவும் உதவியளிக்கும். இது பற்றி கனம் முதல் மந்திரி அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே நன்கு யோசித்து இந்த (Crop Insurance) திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த மந்திரி சபைக்கு சொல்லிக்கொள்ள ஆசை படுகிறேன்.

" 1948-ல் அரசாங்கத்தார் விவசாயிகளுக்கு உதவி செய்வதாக முன் வந்தார்கள். பல விவசாய மக்கள் அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்று, மேலும் தாங்கள் வெளியில் ஆயிரம், இரண்டாயிரம் கடன் வாங்கி செலவழித்து கிணறுகளை வெட்டினார்கள். பல கிணறுகள் வெட்டி தண்ணீர் வராமல் இருக்கின்றன. சில பாதி வெட்டி அதற்கு மேல் பிரயோசனமில்லாமல் அதோடு நிறுத்தப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பல வித கஷ்டங்களுக்கு விவசாயிகள் ஆளாகியிருப்பது காங்கிரஸ் அரசாங்கத்திற்குத் தெரியும். அப்படியிருந்தும் இன்று இவ்வாறு பல கஷ்டங்கள் அனுபவிக்கும் விவசாயிகளிடம் தாங்கள் கடனாகக் கொடுத்த அந்த தொகைகளைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்திக் கேட்பது அபிஷியல் அட்மினிஸ்ட்ரேஷன் (Official Administration) குறையைத்தான் காண்பிக்கின்றது. ஆகையால் இதைக் கவனித்து இந்த கிணறு மான்யத்தைக் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்வாறு இந்த கிணறு மான்யத்தை ஒத்தி வைப்பதோடு, முக்கியமாக விவசாயிகளுக்கு (Crop Insurance) திட்டத்தையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

***Sri A. GOVINDASWAMY NAYAGAR**:—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, தற்சமயம் சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த விவசாயக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை நான் ஆதரித்துப் பேசும்போது சில திருத்தங்களை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். திருத்தங்கள் கொடுத்திருக்கிற காரணத்தால் என்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் எதிர் கட்சியில் இருக்கிற காரணத்தால் எதையும் எதிர்ப்பேன் என்று நினைக்கவேண்டாம்.

12-30 p.m.

" எதிர்க் கட்சியிலிருந்து வருகின்ற நல்ல திருத்தங்களை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டால் தான் ஜனநாயக சர்க்கார் நடத்துகிறோம் என்று பெருமைப்பட முடியும். ஆகவே, நாங்கள் கொடுத்த திருத்தங்களை கனம் ராஜாஜி அவர்கள் ஆலோசித்து ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

"இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவானது பெரும் பணக்காரர்களுக்கும் நன்மை அளிக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏழை விவசாயிகளுக்கு நன்மை வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். இது வக்கீல்களைப் பாதிக்கின்றது. ஆகையால், அவர்களில் சிலர் இதை எதிர்க்கிறார்கள்.

"நான் ஒரு ஐயங்கார் வக்கீல் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். நாங்கள் கல்வி திட்டத்தை எதிர்த்த சமயத்தில் 'ராஜாஜி கொண்டு வந்த கல்வி திட்டத்தை ஏன் எதிர்க்கிறீர்கள்? அவருடைய மூளை அபாரமானது' என்று அவர் சொன்னார். **(His brain is as sharp as the razor blade)** ஆனால் அதே வக்கீல் என்ன சொல்லுகிறார் என்றால் இந்த சட்டம் வந்தால் இது அவருடைய தொழிலை பாதிப்பதால் அவர் என்ன சொல்லுகிறாரென்றால் ராஜாஜிக்கு வயதாகி மூளை குழம்பி விட்டது என்று சொல்லுகிறார்."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—"கொஞ்ச காலமாகத்தான் என் மூளை குழம்பி விட்டது. உண்மை தான்."

*SRI A. GOVINDASWAMY NAYAGAR :—"இந்தச் சட்டம் வந்த பிறகு விவசாயிகள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். சமுட்டிக்குப்பம் ராஜுவேல் சமுட்டியர் என்ற ஒரு விவசாயி அகரம் ஆறுமுக செட்டியார் என்பவரிடம் வாங்கின ரூ. 450-க்கு புரோ நோட்டு ரூ. 1,260-க்கு எழுதிக் கொடுத்து கடன் வாங்கினார். அது மட்டுமல்ல. வேறு ஒருவரை, அதாவது நடராஜ படையாச்சி என்பவர் Surety ஆக இருப்பதற்கு அவருக்கு ரூ. 1,260-க்கு புரோ நோட் எழுதிக் கொடுக்கும்படியான நிலைமை இருக்கிறது. ரூ. 450 கடனுக்கு ரூ. 2,520-க்கு புரோ நோட்டு எழுதிக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரிக்கு அந்த ராஜுவேல் சமுட்டியார் பல மகஜர் அனுப்பியிருக்கிறார். அநியாயமாக விவசாயிகள் ஏமாற்றப்பட்டு கோர்ட்டிலே ஆஜர் பண்ணப்படுகிறார்கள். கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி அவர்கள் இதைக் கவனிப்பார் என்று நினைக்கிறேன். ஏப்ரல் மாதத்தில் முதல் மகஜர் வந்திருக்கிறது. செப்டம்பர் மாதத்திலும் இரண்டாவது மகஜர் வந்திருக்கிறது. இறுதியாக டிசம்பரில் ஒரு மகஜர் வந்துள்ளது. அதை அவர்கள் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்றையதினம் தனிப்பட்டவர்களிடம் வாங்கிய கடனை ஒத்திவைப்பது போல், சர்க்கார் கடன்களும் ஒத்தி வைக்கப்படவேண்டும். தனிப்பட்ட மனிதனைப் பாதிக்கின்ற சட்டம் தான் சர்க்காரையும் பாதிக்கவேண்டுமென்று வற்புறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன். தனிப்பட்டவர்களிடம் விவசாயிகள் பட்ட கடன்களுக்கு சர்க்கார் அந்தத் தொகைக்கு ஒரு Cheque ஓ அல்லது ஒரு Pro-note ஓ எழுதிக் கொடுக்கவேண்டும். சர்க்காரிடம் அதற்குப் பணம் எங்கே இருக்கிறது என்று கேட்கலாம். கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மனது வைத்தால் பொது மக்களுக்காக கடன் வாங்க முடியும். ஏற்கனவே 5 கோடி ரூபாய் கடன் வேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் மந்திரிகள், ஜமீந்தார்கள், பணக்காரர்கள் எல்லோரும் கேட்ட தொகைக்கு அதிகமாகவே கொடுத்தார்கள். அதே போல், விவசாயிகளின் கடன் நிவாரணத்திற்கென்று மறுபடியும் கடன் கேட்டால் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். அப்படிக் கடன் வாங்கி ஏழை விவசாயிகளுக்கு உதவியளிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

"அப்படிக் கொடுத்தால், விவசாயிகள் கடனை சர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்க ஒரு ஆண்டு தவணை போதாது. மூன்று ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் என்று செய்யவேண்டும்.

[Sri A. Govindaswamy Nayagar] [11th January 1954

" ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் பாங்குகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவ ஏற்பாடு செய்ய வேண்டுமே யொழிய, வெறும் சட்டத்தைப் போட்டுவிட்டால் மாத்திரம் போதாது. விவசாயிகள் கடன் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக விவசாயிகளுக்கு பணம் தேவையாக இருக்கிற காரணத்தால் சர்க்கார் அவர்களுக்கு நீண்ட காலத் தவணைக்கு கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்கின்றேன்."

* Dr. K. B. MENON :—" Mr. Deputy Speaker, Sir, I wish to assure the Treasury Benches that we are in complete agreement with the principle of the Bill. We realise that our credit structure is very weak, that it needs some strengthening and that the Ordinance that has been promulgated has, to some extent, helped to render some relief to the agriculturists. We wish to avail ourselves of the opportunity to strengthen as much as possible the credit structure and we want the Bill to go a little further. That is one of the reasons why we are asking for time.

" Secondly, I am not a lawyer. If I were a good lawyer, I would welcome a bad law because it would mean some income to me. But I refer to that for the simple reason that I want the Hon. the Chief Minister to understand that because we are not lawyers these legal wordings read Greek to us, and that it takes time for us to understand even the corrections suggested by him. From what little I can understand, I believe that his suggestion goes, to some extent, to satisfy the demands of the Opposition. But I cannot even say that it goes far enough, because I do not understand the full implications of the suggestions he has made. Whereas he takes five minutes to understand and formulate these amendments, it will take five days for us to sit, write out and understand the implications of these amendments. That is another reason why we should be given a little time to think over.

" Finally, I want to say the measure is good, but I do not quite see the urgency for pushing it through. The Ordinance, I think, will be in force till the 15th of February. The Budget session may begin by about the third week of February. There is only one week intervening and I hope that the Government will find some way of bridging the gap and then taking up this Bill or will at least give us some more time. That is the plea of the Opposition."

12-40 p.m. Sri C. H. KANARAN :—" ഡിപ്പ്യൂട്ടി സ്പീക്കർ, സാർ, കൃഷിക്കാർക്ക് കടംവന്നിട്ടുള്ളതു് വിളനഷ്ടംകൊണ്ടു് മാത്രമല്ല, മഴയില്ലാത്തതുകൊണ്ടു മാത്രമല്ല, കാർഷികോല്പന്നങ്ങളുടെ വിലക്കുറവും അമിതമായ പാട്ടവുമാണു് കടം വർദ്ധിക്കാനുള്ള പ്രധാന കാരണങ്ങൾ. ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാർ, മഴപെയ്തിട്ടുണ്ടു്, എല്ലാം ശരിയായിക്കൊള്ളുമെന്നുള്ള ഒരു നിലയാണു് സ്വീകരിച്ചുകാണുന്നതു്. വളരെ കൊല്ലങ്ങളായി കൂടിക്കൂടിവന്നിട്ടുള്ളതാണു് കൃഷിക്കാരുടെ കടം. മഴ പെയ്തതുകൊണ്ടുമാത്രം ആ കടം തീരാൻപോകുന്നില്ല. മലബാറിന്റെ പല ഭാഗങ്ങളിലും മഴ ഉണ്ടായിട്ടില്ല. വിളവുണക്കു് ധാരാളം സ്ഥലങ്ങളെ ബാധിച്ചിട്ടുണ്ടു്. ഒരു കൊല്ലത്തെ അവധി കൊടുത്തതുകൊണ്ടു് കടമെല്ലാം തീർക്കാൻ സാധിക്കുമെന്നു പറയുന്നതു ശരിയല്ല. വളരെക്കാലംകൊണ്ടുണ്ടായിട്ടുള്ള കടങ്ങൾ ഒരു കൊല്ലംകൊണ്ടു് വീട്ടിത്തീർക്കാമെന്നു വിചാരിച്ചാൽ സാദ്ധ്യമല്ല. ഏതായാലും കടങ്ങളെ താല്ക്കാലികമായി നിറുത്തിവെക്കാൻ ഗവർമ്മെണ്ടു് കൊണ്ടുവന്ന ഈ ബില്ലിനെ ഞാൻ സ്വാഗതം ചെയ്യുന്നു. അതേസമയം ഈ ബില്ലിന്റെ ചില പോരായ്മകളെ എടുത്തുപറയാതിരി

11th January 1954] [Sri C. H. Kanaran]

ക്കാനും നിവൃത്തിയില്ല. കൃഷിക്കാർക്ക് രക്ഷനൽകാനാണ് ഈ ബില്ല് ഉണ്ടാക്കപ്പെട്ടിട്ടുള്ളത്. പക്ഷെ കർഷകത്തൊഴിലാളികളെ സംബന്ധിച്ചേടത്തോളം ഈ ബില്ലുകൊണ്ട് യാതൊരു രക്ഷയുമില്ല. കർഷകത്തൊഴിലാളികൾ കൃഷിക്കാരിൽ ഒരു പ്രധാന ഭാഗമാണ്. തീർച്ചയായും ഒരു വലിയ വിഭാഗം വരുന്ന കർഷകത്തൊഴിലാളികൾക്ക് ഈ ബില്ലുകൊണ്ട് രക്ഷയില്ലെന്നുള്ളതു പരമാർത്ഥമാണ്. ഭൂമിയിൽ എന്തെങ്കിലും അവകാശമുള്ള എല്ലാ ഭാഗങ്ങളെയും ഈ ബില്ലിൽ ഉൾക്കൊള്ളിച്ചിട്ടുണ്ട്. വലിയ വലിയ ജന്മിമാർക്കുകൂടി ഈ ബില്ലുകൊണ്ട് ഗുണം കിട്ടുന്നുണ്ട്. അതുകൊണ്ട് ഈ ബില്ലിന്റെ പേരുതന്നെ 'Indebted Agriculturists and Landlords (Temporary Relief) Bill' എന്നെഴുതിയാൽ കൂടുതൽ ശരിയായിരിക്കും. കൃഷിക്കാർക്ക് മാത്രമല്ല ജന്മിമാർക്കുകൂടി ഗുണം ചെയ്യാനാണ് ഈ ബില്ലുകൊണ്ടുദ്ദേശിക്കുന്നത്. തീർച്ചയായിട്ടും ജന്മിമാർക്ക് ഇത്തരത്തിലൊരു ഗുണം ചെയ്യേണ്ട ആവശ്യമില്ല. ലക്ഷക്കണക്കിന് ഉറുപ്പികകണ്ട് ജന്മിമാർ കടം വാങ്ങിയിട്ടുണ്ടാവും. അവർക്ക് രക്ഷ നൽകേണ്ട ആവശ്യമില്ല. അവർക്ക് രക്ഷ നൽകുന്നത് തെറ്റാണ്. യഥാർത്ഥ കൃഷിക്കാർക്ക് രക്ഷ നൽകണമെന്നുള്ളതാണ് ഉദ്ദേശമെങ്കിൽ ജന്മിമാർക്ക് ഗുണം ചെയ്യുന്ന വ്യവസ്ഥ എടുത്തുകളയണം.

"കടത്തിന്റെ കാലാവധിയെ സംബന്ധിച്ചാണ് ഇനി പറയാനുള്ളത്. ഒരു കൊല്ലംകൊണ്ടു ഈ കടങ്ങൾ വീട്ടിത്തീർക്കാനുള്ള പരിതഃസ്ഥിതിയൊന്നും ഉണ്ടാകാൻ പോകുന്നില്ല. അഞ്ചുകൊല്ലം ആക്കണമെന്ന ഒരു ഭേദഗതി ഞാൻ കൊടുത്തിട്ടുണ്ട്. അതു സ്വീകാര്യമല്ലെങ്കിൽ മൂന്നു കൊല്ലമെങ്കിലുമാക്കണം. അതു കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈററികളെ ബാധിക്കരുത്. കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈററികൾക്കു കൊടുക്കാനുള്ളത് ഒരു കൊല്ലമെന്നുതന്നെ വെച്ചാൽമതി. മററു കടങ്ങൾ മൂന്നു കൊല്ലവും കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈററികൾക്കു കൊടുക്കാനുള്ളതു ഒരു കൊല്ലവുമെന്നാക്കണം. കാലാവധി നീട്ടുക മാത്രമല്ല ഈ കടങ്ങളെപ്പററി ശരിയായ ഒരന്വേഷണം നടത്തി പലതും വെട്ടിച്ചുരുക്കണമെന്നാണ് ഞാൻ പറയുന്നത്. ഇരുന്നൂററി അമ്പതുറുപ്പികയ്ക്കു പ്രമാണം എഴുതിക്കൊടുത്തിട്ടു 100 ക. കയ്യിൽ വാങ്ങുന്ന ഒരു സ്ഥിതിയാണു മലബാറിലുള്ളത്. കുരുമുളകിന് 250 ക. വിലയുള്ളപ്പോൾ 100 ക. കടമായി കയ്യിൽ കൊടുത്തിട്ട് മുളകു മുഴുവൻ കൈക്കലാക്കുന്ന ഒരു സമ്പ്രദായം മലബാറിലുണ്ട്. ഇങ്ങനെയുള്ള ഇടപാടുകൾ കാരണം മലബാറിലെ മിക്ക കൃഷിക്കാരും നശിച്ചുകഴിഞ്ഞിരിക്കുന്നു. കടം വീട്ടാനാവശ്യപ്പെടുന്നതിന്നുമുമ്പു എത്ര കടം വെട്ടിച്ചുരുക്കണം എന്നു ഒരു അന്വേഷണം നടത്തണം. അല്ലാതെ ഒരു കൊല്ലം നീട്ടിയതുകൊണ്ടുമാത്രം കൃഷിക്കാരനു വലിയ രക്ഷകിട്ടാൻ പോകുന്നില്ല. ചുരുക്കത്തിൽ ഞാനാവശ്യപ്പെടുന്നത് ഈ ബില്ലിൽ കർഷകത്തൊഴിലാളികളെ കൂടി ഉൾപ്പെടുത്തണം ജന്മിമാരെ ഉൾപ്പെടുത്തരുത് എന്നാണ്. ഒരു കൊല്ലമെന്നതു മൂന്നു കൊല്ലമാക്കണം; കോ-ഓപ്പറേറ്റീവ് സൊസൈററികളെ സംബന്ധിച്ചേടത്തോളം ഒരു കൊല്ലം വയ്ക്കണം; ഏതെല്ലാം കടങ്ങളാണ് വെട്ടിക്കുറക്കേണ്ടതെന്ന് ഒരന്വേഷണം നടത്തണം.

"മറെറാരു പ്രധാന സംഗതികൂടി പറയാനുണ്ട്. കടം കൊടുക്കാനുള്ള ഏർപ്പാടുകൾ നിറുത്തിയില്ലെങ്കിൽ കൃഷിക്കാർ കടത്തിൽ പെടാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. കൃഷിക്കാർക്ക് കൊടുക്കുവാൻവേണ്ടി ഗവർമ്മേണ്ടിന്നുതന്നെ ധാരാളം ഉറുപ്പിക കടം എടുക്കാം. അതു കൃഷിക്കാർക്ക് കടമായി കൊടുക്കാൻ സാധിക്കും. ഗവർമ്മേണ്ടിൽനിന്നു കടം കൊടുക്കുകയാണെങ്കിൽ കൃഷിക്കാർക്ക് അത്ര വലിയ കടം ഉണ്ടാവുകയില്ല. കടം കിട്ടാൻ സൌകര്യമുള്ള കാലത്തോളം കൃഷിക്കാരനു കടത്തിൽനിന്നു രക്ഷകിട്ടാൻ പോകുന്നില്ല."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER:—"Mr. Deputy Speaker, Sir, first of all, I thank the 25 hon. Members for the remarks and suggestions made in the course of this discussion. The Bill has been universally welcomed except by a solitary Member hailing from the Gingee taluk. I really admire his courage to stand all alone in this Assembly against this Bill. But that has been more than counteracted by the Leader of his Party who stood up and said that he stood for this Bill. I can understand that. He comes from an out and out agricultural community and he moves daily with the agriculturists. He lives in the village and he knows their difficulties,

Therefore, he understands and welcomes this Bill. I congratulate the Leader of the Toilers Party on the stand he has taken. The other Member of that Party I referred to oppose this Bill. That also I can understand. He lives in a different atmosphere and moves in an atmosphere of his own. Therefore, he is not able to understand the situation. So, I really sympathise with him.

"From the general trend of the discussion, I find that about half a dozen points have been made out. I shall meet them in a general way in so far as is necessary here and in a particular way when the appropriate clauses are taken up for discussion. The first point is that the Bill should be referred to a Select Committee. It has already been explained why it is not practicable now to think of a Select Committee. Ordinarily, when we find time and time does not sit tight on us, we refer Bills to a Select Committee and there have been instances when we referred Bills to a Select Committee, e.g., the Malabar Tenancy Bill and the Preservation of Private Forests Bill. Here in this case we are not in a position to do that. This is an urgent Bill. This is not of a permanent nature. This is a simple Bill consisting of seven or eight clauses of which only two or three clauses are really important. Therefore, we are not able to oblige hon. Members in that direction.

"Some criticism was made that this Bill was being hurried through and that it was not brought up soon after the Ordinance was promulgated. Sir, the Government took every step to publish the Bill as early as possible. But still in the matter of preparing a Bill, there are so many factors to be considered. The Bill has to be revised in a way more suitable and then it has to go through various processes in the Department. All that took time and the earliest one found possible was on the 5th or the 6th January 1954 and we published it without any delay. So, the charge of delay should not be levelled against the Government. Any other charge I may accept but not that charge.

"Another point was that the Bill went too far. It was contended that it protected people who ought not to be protected. An allegation was also made that it did not protect people who ought
12-10 p.m. to be protected. So there are these two extremes. In making a statute, it is not always possible to fit in everything. It is not like a tight jacket to be fitted in exactly. Legislation cannot be made exactly to the point. If this is done, there is no need for courts at all. The very fact that there are courts, lawyers arguing cases and judges giving judgment shows clearly that there is some loophole in the legislation. We have tried our best to bring within the scope of the Bill all people who deserve this help. We have tried our best to do the maximum good in that way. If some escape and if some who are not entitled to come in are included, we cannot help it. Sir, when a beneficial legislation is brought, it is in the nature of rain. When it rains, it makes no distinction between good men and bad men, those who deserve it and who do not deserve it and those who want it and those who do not want it.

11th January 1954] [Sri M. A. Manickavelu Naicker]

A beneficial legislation is also like that. It is expected to do good for these to whom it is intended. But, if it causes some hardship and inconvenience to certain others, we cannot help it. In legal drafting, we shall try as far as possible to bring the desired people within the scope of the Bill.

"Now, we have met one point, viz., the exclusion of rich people, by the amendment that was suggested by the Hon. Chief Minister. By introducing a clause that income-tax assessees will be beyond the purview of this Act, we have done a good deal. Because, that will cover many cases. Big mirasdars and businessmen who may now come within the scope of the Bill, will be excluded. If some mirasdars escape, it does not matter. After all, mirasdars have also got to collect money from the tenant. As it now stands, they cannot collect the money from the tenant. So they are also hit. The idea of some people seems to be that the mirasdars should be hit somehow or other. They are also hit by this particular legislation. They cannot collect the money from the ryots below them. So, let those hon. Members have the satisfaction that the mirasdars are also affected by this legislation.

"Sir, some of the lawyer Members have suggested that the 'stay' should apply only to execution and not to suits. They said there would be accumulation of work and that soon after one year, the courts will find it very difficult to cope with the work. My answer to those friends is this. I know these courts. I was also a practising lawyer once and I know what is taking place in a court. The Judges generally take simple cases and they try to postpone very complicated cases, like suits relating to titles, etc., as far as possible. This will give an opportunity to the courts, when they have no work, to take up such cases and clear off the arrears. The lawyer friends also will have good work then."

THE HON. SRI C. RAJAGOPALACHARI:—"And big fees also." (Laughter.)

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER:—"So, let it not be complained that the courts will come to a standstill.

"As regards the point, as to why we gave this stay of suits, it was clearly explained. We wanted that the ryots should not be embarrassed. The very fact that there is a suit against him terrifies many a ryot. When I say this, I am not referring to the court-bird variety. I only refer to the ordinary variety of ryots, who are very much afraid of suits. I know very many ryots do not go to a court; they would rather prefer to postrate before the creditor and get time to repay the money than face court proceedings. For such people, the very notice of a suit will be a great embarrassment and will put them out of sorts. Members know the difficulties of these poor ryots. The ryot has to come from a far off place. When he comes to the lawyer's house, the lawyer will not be found and only the clerk will be available. When he

comes a second time, he will find the lawyer, but not the clerk. When both the lawyer and the clerk are available, the lawyer may be engaged in some other work. In this manner, the poor ryots are likely to be put to embarrassment in many ways. We only want to avoid such embarrassments to the ryot. That is all.

" It was suggested by some hon. Member that the collection has to be done in three instalments. It is a matter of detail whether it should be in one instalment or three instalments. That has got to be discussed and we shall see that later on.

" Some hon. Members said that takkavi loans and other Government loans should also come under this Bill and the ryots have to be given protection from these loans also. Yes, it will be a good thing. Even if the whole amount, I mean all the loans are wiped off—I am saying this only for argument—it will be a better thing. But, it is not possible to do so. The Government are like parents to the ryots. They know when to do good for the ryots. They know when to give tax exemption. As a matter of fact, during the period of famine and distress, the Government granted so many remissions. In such times, the Government will certainly come to the rescue of these poor ryots. Hon. Member Sri Raja Chidambaram spoke on takkavi loans and well subsidies. He also gave a petition to me a few days back and I took action on it immediately. In dry areas which had experienced drought continuously and where distress and famine were prevalent, we have asked the Collector to postpone the collection of these loans. In such cases, we do interfere and come to the rescue of the ryots. So, people need not be afraid of the Government. There is always difference between an ordinary creditor and a 'Government creditor.' That is all what I want to make out.

" Sir, I think the hon. Member Sri Manali Kandasamy welcomed this Bill. But, he said that this does not go far enough, there was no use in postponing the payment of arrears for one year, and the whole thing must be wiped out. His speech amounted to that. I want to make the position clear. Let no impression be created that as a result of agitation or otherwise, the Government will be prepared to wipe off these debts. That is not going to happen. I think that has been made very clear. Hon. Members have pointed out that rural credit was in danger, the ryots were not able to get any loan because of the declaration of a moratorium and because of the fear that it was likely to be extended by another two or three years and it was also likely that the whole thing would be wiped out. Let me say here and now that no such thing will happen. The Government are not going to do it, as it will not be in the interests of the ryots themselves. We want that rural credit should be readily available for the ryots. Already, sufficient money is not available to them and we have taken various steps to make money easily available for the ryots. Anyway, that is a bigger question which has to be considered at the All-India level in Delhi. So, we need not go into it just now. Let nobody be under the impression that this is only the first

11th January 1954] [Sri M. A. Manickavelu Naicker]

instalment of a possible or probable measure for wiping off the arrears at a later stage. It would be bad for the ryots. I want that people should not have this impression.

"Hon. Member Sri Karuthiruman and some others advanced the plea for a crop insurance scheme. As I said in the beginning, this is a small, temporary Bill which declares a moratorium for one year. It is not quite right to bring all these bigger questions within the scope of this small Bill which has a very limited objective. All these bigger questions have to be considered at the proper time.

"My lawyer friend behind who comes from the same district as I do, has given certain suggestions. If I were to adopt Mr. Panchaksharam Chettiar's suggestions, it will involve an elaborate enquiry. We are not going to have an inquisitorial enquiry to go into each and every question. The idea is to avoid such enquiry as far as possible, so that the relief can be given to the ryots easily and there may not be any doubts about it. That is why we are not able to accept certain amendments relating to banks, big businessmen and so on. If we were to accept such suggestions and amendments, it will considerably delay matters. Such delays will of course be welcomed by one section of people who will have a very good crop. But that will defeat the very object of this Bill. I see the force of some of the amendments. But I must tell the hon. Members that it is not humanly or legally possible to fit in everything. There will be some loophole and we cannot help it.

(At this stage, Mr. Speaker occupied the Chair.)

"Let us view it in an overall way and see how far it will 1 p.m.
justify itself. Sir, it is one of the clock. All hon. Members are hungry and I am also hungry. We shall now pass the motion and meet in the afternoon to take up the Bill clause by clause. I would request the hon. Mover of the amendment to refer the Bill to a Select Committee to withdraw it."

MR. SPEAKER:—"I wish to know whether Mr. Vinayakam withdraws his motion."

* SRI K. VINAYAKAM:—"Sir, before we come to any decision on the motion, I have got to explain a few points. It is I that moved that the Bill be referred to a Select Committee. After me, a sufficient number of Members have spoken in support of the Motion, but from other points of view than mine. A few lawyers and a few mirasdars—to quote the language of the Minister in charge of the Bill—have also adduced several reasons why it should go before a Select Committee. Here, I would like to clear a misapprehension as Dr. Menon put it. I am not a practising lawyer. I am not interested in legal quibblings that this Bill may give rise to. It is also very difficult to trap me and, therefore, it is not that lawyers tempted me to table these amendments. I want to make the Bill a perfect one. This is a haphazard Bill.

This is a Bill which seeks to give protection to agriculturists, but does not satisfy the needs felt in the villages. I would ask the Minister in charge to ponder over the amendments tabled by me. I wanted that the term ' agriculturists must be defined properly so that an absentee landlord may not get the benefit of the Bill. And now the Government have come forward with a slight modification of the definition exempting agriculturists who are income-tax assessees. What about agriculturists who pay property tax, house tax, etc.? If the Government had come forward with a little more clarification, I would have been satisfied. Then, Sir, there is another factor to be considered. There are certain institutions in Madras giving loans to the residents of Madras on house property and the like. Such kind of institutions should not be brought within the scope of the Bill simply because the men who run for the aid of such banks are agriculturists. The Government are interested in safeguarding the finances of the State and co-operative institutions. What about ' Nidis ' which have advanced loans on property in Madras? Their transactions will come to a standstill if the Bill applies to them. Such ' Nidis ' should also be exempted. Otherwise rural credit will go."

The Hon. Sri M. A. MANICKAVELU NAICKER:—" Sir, my experience of discussions and debates is that after the Minister in charge replies, there will be no speech by any hon. Member because there is no opportunity for the Minister to reply again."

Mr. SPEAKER:—" The Mover has got a right of reply. After he replies, I will ask the Minister to reply again."

* Sri K. VINAYAKAM:—" I am very glad, Sir, that the past experience of the Minister has not stood him all right on this occasion. (Laughter.) Sir, I was harping on the point that the Government should not only come forward to help the agriculturists in a negative way but that they should be provided all facilities on the positive side."

Mr. SPEAKER:—" The hon. Member has the right of reply but he should be brief." (Laughter.)

* Sri K. VINAYAKAM:—" Agriculturists are now at the mercy of usurious money-lenders who adopt all sorts of questionable methods in the matter of lending money to them. These are all the points which I want a Select Committee to consider. The Hon. the Chief Minister says that if we obstruct the passage of this Bill to-day, he will go about the country and tell the people: ' They are against giving aid to agriculturists '. Sir, we want to give the agriculturists better facilities. We want to be more helpful to them than the Government are. The Government should not create a harvest for the lawyers to reap, as the Hon. the Minister for Revenue said. If you have a definition like the one contained in the Bill, you will only be encouraging intelligent lawyers to make a harvest out of the Bill. These are the points which I want to be clarified and, therefore,

11th January 1954] [Sri K. Vinayakam]

I want the Bill to go before a Select Commitee. I am not satisfied with the abundance of reasons with which he tried to defend his Bill. Therefore, it should go before a Select Committee."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER:—"My reply is I oppose the Motion."

* SRI K. VINAYAKAM:—"I regret my inability to withdraw the motion."

MR. SPEAKER:—"The question is—

'That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1954, be referred to a Select Commitee'."

The motion was put and lost.

MR. SPEAKER:—"The question is—

'That the Madras Indsbted Agriculturists (Temporary Relief) Bill, 1954, be circulated for eliciting public opinion.'"

The motion was put and lost.

MR. SPEAKER:—"I will now put the Government motion to the vote of the House. The question is—

'That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1954, be taken into consideration at once.'"

The motion was put and carried.

MR. SPEAKER:—"I adjourn the House to meet again at 3 p.m."

The House then rose for lunch.

(After lunch—3 p.m.)

MR. SPEAKER:—"We shall now take up the consideration of the Bill clause by clause."

Clause 3.

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER:—"Sir, I move—

'*In clause* 3 add *the following proviso to Explanation II*—

"*Provided that a suit for possession of land shall not be deemed to be a suit for recovery of a debt by reason merely of mesne profits being also prayed for in such suit.*"'"

MR. SPEAKER:—"Motion moved—

'In clause 3 *add* the following proviso to Explanation II—

"Provided that a suit for possession of land shall not be deemed to be a suit for recovery of a debt by reason merely of mesne profits being also prayed for in such suit."'"

[11th January 1954

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I move—

' Number *the existing Explanations I and II as II and III and* insert *the following as Explanation I* :—

" *Explanation I.—' Suit ' does not include a claim to a set off made in a suit instituted by an agriculturist.*" ' "

MR. SPEAKER :—" Motion moved—

' *Number* the existing Explanations I and II as II and III and *insert* the following as Explanation I—

" *Explanation I.*—' Suit ' does not include a claim to a set off made in a suit instituted by an agriculturist." ' "

SRI S. PANCHAKSHARAM :— ' Sir, I move—

' (1) After *the words " for the recovery of a debt shall be made "* add " *Except where a debt is payable by an agriculturist jointly or jointly and severally with a non-agriculturist* ".

(2) Omit *the words in last line " from the date of the commencement of this Act " and* add *after the words " before the expiry of the year " the figure* " 1954 ". ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' (1) *After* the words " for the recovery of a debt shall be made " *add* " Except where a debt is payable by an agriculturist jointly or jointly and severally with a non-agriculturist."

(2) *Omit* the words in last line " from the date of the commencement of this Act " and *add* after the words " before the expiry of the year " the figure " 1954 ". ' "

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' After *the words " of a debt " occurring in line* 2, insert *the words " and no application for eviction from any land for non-payment of arrears of rent which accrued before* 31*st March* 1953 ".' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' *After* the words " of a debt " occurring in line 2, *insert* the words " and no application for eviction from any land for non-payment of arrears of rent which accrued before 31st March 1953 ".' "

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' For *the words " Civil Court " occurring in line* 5, susbtitute *the words " Revenue Court* " ' "

The amendment was duly seconded.

11th January 1954]

MR. SPEAKER :—" Motion moved—

' *For* the words " Civil Court " occurring in line 5, *substitute* the words " Revenue Court ".' "

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' *For* the words " a year " *substitute* the words " two years" ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' *For* the words " a year " *substitute* the words " two years." ' "

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' Add *at the end of Clause* 3, *the following proviso* :—

" *Provided that the Government may extend the operation of this Act to such further period on a resolution being passed to that effect by the Legislative Assembly.*"

After *Explanation II* insert *the following new Explanation* :—

" *Explanation III.—In any suit or proceeding or application of the nature mentioned in Section 3, any agriculturist may be represented by an agent authorised in writing other than a Pleader or an Advocate only to prove whether such person is an agriculturist or not.*" ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' *Add* at the end of Clause 3, the following proviso :—

" Provided that the Government may extend the operation of this Act to such further period on a resolution being passed to that effect by the Legislative Assembly."

After Explanation II, *insert* the following new Explanation :—

" *Explanation III.*—In any suit or proceeding or application of the nature mentioned in Section 3, any agriculturist may be represented by an agent authorised in writing other than a Pleader or an Advocate only to prove whether such person is an agriculturist or not." ' "

SRI K. P. GOPALAN :—" Sir, I move—

' After *the words* " *any agriculturist* " add *the words* " *or a labourer* ".' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' *After* the words " any agriculturist " *add* the words " or a labourer ". ' "

[11th January 1954

SRI K. V. RAMASWAMY :—" Sir, I move—

' For *the words* " *a year* " (*in line* 5 *of clause* 3) substitute *the words* " *five years* ".' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

'*For* the words " a year " (in line 5 of clause 3) *substitute* the words " five years ".' "

SRI M. PALANIYANDI :—" Sir, I move—

' *In Clause 3* after *the words* " *commencement of this Act* ", insert *the words* " *or such other period as may be resolved upon by the Legislative Assembly on a motion made on that behalf* ". ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' In Clause 3 after the words " commencement of this Act ", *insert* the words " or such other period as may be resolved upon by the Legislative Assembly on a motion made on that behalf ".' "

SRI E. L. RAGHAVA MUDALIAR :—" Sir, I move—

' *In line* 5 *of paragraph* 1 *of clause* 3 for *the words* " *a year* " substitute *the words* " *three years* "

In Explanation I, for *the words* " *no suits or application of the nature . . . before the expiry of the period mentioned in this section* ", substitute *the words* " *suits can be filed but execution of decree that may be passed shall be taken against non-agriculturists only* ". ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

' In line 5 of paragraph 1 of clause 3 *for* the words " a year " *substitute* the words " three years "

In Explanation I, *for* the words " no suits or application of the nature . . . before the expiry of the period mentioned in this section ", *substitute* the words " suits can be filed but execution of decree that may be passed shall be taken against non-agriculturis only ". ' "

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, I move—

' *In Explanation I*, omit *the words* " *either against the non-agriculturist or* " after *the word* " *made* " *in the fourth line and* before *the word* " *against* " *in the fifth line.* ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved.—

' In Explanation I, *omit* the words " either against the non-agriculturist or " *after* the words " made " in the fourth line and *before* the word " against " in the fifth line. ' "

11th January 1954]

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, I think an amendment of the term 'agriculturist' is now being proposed by Government. Therefore"

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" I hope the hon Member will not mind my saying that there is one difficulty in regard to all the amendments now moved. If you make a provision in favour of one joint debtor and at the same time another joint debtor is excluded, the result will be that a surety may be proceeded against and the principal debtor cannot be proceeded against. Again we cannot make a difference between one kind of creditor and another, one creditor can proceed against a debtor and dispose or bring to sale all the latter's property, thereby ruining the other creditor. That is the difficulty in respect of these amendments. The hon. Member Mr. Swayamprakasam being a lawyer ought to know this."

SRI N. K. PALANISAMI :—" Mr. Speaker, Sir, I move—

'For *the words* "*before the expiry of a year from the date of commencement of this Act*" substitute *the words and figures* "*before* 31st May 1959". '"

The motion was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

'*For* the words "before the expiry of a year from the date of commencement of this Act" *substitute* the words and figures "before 31*st May* 1959". '"

SRI E. I. RAGHAVA MUDALIAR :—" Sir, I move—

'For *the existing Explanation II* substitute *the following* :—

"*Explanation II.—In suits wherein other reliefs are coupled with payment of money, the suit can be tried and decree may be passed, but the decree can be executed only in respect of the other reliefs and not for payment of money*". '"

The motion was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

'*For* the existing Explanation II, *substitute* the following :—

"*Explanation II.*—In suits wherein other reliefs are coupled with payment of money, the suit can be tried and decree may be passed, but the decree can be executed only in respect of the other reliefs and not for payment of money". '"

3-10 p.m. SRI S. PANCHAKSHARAM:—" I beg to move—

'For *Explanation II*, substitute *the following*:—

" *Explanation II.—A suit shall not be deemed to be a suit for the recovery of a debt as defined in section 2 (c) if other reliefs are prayed in such suit and a decree shall not be deemed to be decree for payment of money unless the decree obtained is on a debt as defined in section 2 (c).*" ' "

SRI S. S. RAMASWAMI PADAYACHI:—" I beg to move—

'*Add at the end of clause 3, the words " and such debt shall be recovered in three equal annual instalments ".*' "

SRI K. ARANGANATHAN:—" I second the amendments, Sir."

MR. SPEAKER:—" Motion moved—

'*For* Explanation II, *substitute* the following.—

" *Explanation II.*—A suit shall not be deemed to be a suit for the recvoery of a debt as defined in section 2 (*c*) if other reliefs are prayed in such suit and a decree shall not be deemed to be decree for payment of money unless the decree obtained is on a debt as defined in section 2 (*c*) ".' "

'*Add* at the end of clause 3, the words ' and such debt shall be recovered in three equal annual instalments." '

" The motion as well as all the amendments are before the House for discussion."

3-11 p.m. *SRI S. RAMALINGAM:—" கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பாக இருக்கும் மசோதாவில் செக்ஷன் 3 அதாவது கடன்காரர்கள் வாங்கி இருக்கக்கூடிய கடனை ஒரு வருஷ காலத்திற்கு அதன் பேரில் கோர்ட்டு நடவடிக்கைகளோ அல்லது டிகிரியாக இருந்தால் அந்த சொத்துக்களின்பேரில் நடவடிக்கைகள் எடுப்பதற்கோ ஒரு வருஷம் ஒத்தி வைக்கவேண்டும் என்பது சட்டத்தின் முக்கியமான அம்சமாக இருக்கிறது. இங்கு நான் கொடுத்திருக்கும் என்னுடைய திருத்தத்தில் குறைந்த பட்சம் மூன்று வருஷங்களாவது அந்தமாதிரி கடன் வசூலிப்பதை ஒத்தி வைக்கவேண்டும் என்று கோருகின்றேன். அதை எதிர் கட்சியில் இருக்கக்கூடியவர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். இந்தத் திருத்தங்களைக் கொண்டுவந்ததன் நோக்கம் என்னவென்றால் கடன்காரர்கள், சென்ற ஐந்து ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கக் கூடிய பஞ்சத்தால், மழை இல்லாததால், அவர்கள் நசித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கடன் வாங்கிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். அந்தமாதிரியான நிலையில் இருக்கும் விவசாயிகளுக்கு ஒரு வருஷம் நிவாரணம் போதுமா என்று பார்த்தால் அது போதாது என்பதுதான் எங்களுடைய வாதம். இன்றைக்கு சாகுபடி செய்து வந்தால் அவர்களுக்கு கொஞ்சம் தான்யங்கள் கிடைக்கும். ஒரு வருஷம் முடிந்தவுடன் அந்த கடன்காரர்களுடைய நெருக்கடி அதிகமாக ஏற்படும். ஒரு வருஷம் முடிந்த உடன் விவசாயிகளிடம் இருக்கக்கூடிய சொத்துக்களையும் தான்யங்களையும் கடன் கொடுத்தவர்கள் கண்டிப்பாய் கைப்பற்ற முயற்சி செய்வார்கள். அதனால் இந்த சட்டத்தை எந்த நோக்கத்தோடு கொண்டுவந்தோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். அதற்காகவே மூன்று வருஷங்கள் என்று வைத்தால் அதாவது மூன்று வருஷங்களுக்கு அந்தக் கடனை வசூலிக்கக்கூடாது என்று வைத்தால் ஒருக்கால் கனம் ராஜாஜி எதிர்பார்ப்பது போன்று நல்ல மழை பெய்தால் . . ."

11th January 1954]

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" நான் கூறுவது போல் . . ."

* SRI S. RAMALINGAM :—" நல்ல மழை பெய்து விவசாயிகள் நல்ல சாகுபடி செய்து ஏதாவது கொஞ்சம் மிச்சம் மீதி இருந்தாலும் அதைக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். அதற்காகத் தான் மூன்று வருஷங்கள் இருக்க வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சென்ற மூன்று வருஷங்களாக மழை இல்லாததால் சரியானபடி சாகுபடி செய்ய முடியவில்லை. ஏர் உழுவதற்கு மாடுகளைக் கூட வாங்க முடியாமல் ஏற்பட்ட காரணத்தால் கல்லுப்பட்டியில் கூட மாடுகள் வாங்க சக்தி இல்லாமல் மனிதர்களே ஏர் உழுதார்கள் என்று பத்திரிகையில் பார்த்தோம்,—இவ்வளவு கஷ்டமான நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஒரு வருஷம் போதாது, அதை மூன்று வருஷங்கள் விஸ்தரிக்க வேண்டும் என்று இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு முக்கியமான நோக்கத்தோடு இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனிதன் ஏர் உழுததாக சரித்திரத்தில் பார்த்ததே கிடையாது. ஆனால் தமிழ் நாட்டில் அந்த நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த திருத்தத்தின் மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தான் நமது நோக்கம்.

' *After* the words " of a debt " occurring in line 2, *insert* the words " and no application for eviction from any land for non-payment of arrears of rent which accrued before 31st March 1953 ".'

" குத்தகை பாக்கிக்கும் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் வரவேற்கிறோம். இப்பொழுது சென்ற காலத்தில் குத்தகை பாக்கிக்காக பல்லாயிரக் கணக்கான விவசாயிகளை நிலத்தை விட்டு அப்புரப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். குத்தகை வாரம் பாக்கிக்காக அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளித்து கோர்ட்டுகளில் நடக்கும் கேஸ்களை நிறுத்தி வைக்க வேண்டும் என்பதும் தாக்கல் செய்த கேஸ்கள் மேல் நடவாமல் நிறுத்தப்பட வேண்டும் என்பதும் தான் எங்களுடைய நோக்கம். அதுதான் இந்த திருத்தத்தின் நோக்கம். இந்த சட்டத்தில் இருக்கக் கூடிய நோக்கத்தை பிரதிபலிக்கக் கூடிய திருத்தம் இது. இதை சர்க்கார் ஒத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்தோம். அதன்படி ஐந்து வருஷங்களுக்கு விவசாயிகளை அப்புறப்படுத்தக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறோம். சென்ற வருஷம் அங்கு அடித்த புயல் காரணமாகவும் இன்னும் மற்ற காரணங்களாலும் விவசாயிகளால் குத்தகை வாரம் கட்ட முடியவில்லை. அந்த நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது. குத்தகை பாக்கியை ஒரு வருஷம் வசூலிக்கக்கூடாது என்று கூறி இருக்கின்றோம். ஆனால் நிலத்தை விட்டு வெளியேற்ற கூடாது என்று தடுக்கவில்லை. அதனால் நிலத்தை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டால் கடன் ஒத்திவைப்புச் சட்டம் சலுகை கிடையாது. ஆகையால் நிலத்தை இழப்பதோடு அல்லாமல் கடன் தொல்லையும் பாதிக்கும். இது தஞ்சை ஜில்லாவில் மட்டும் இல்லை, மற்ற எந்த ஜில்லாவிலும் இருக்கிறது. அந்த மாதிரி ஏதாகிலும் சிவில் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் இருந்தால் அதையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

' Provided that the Government may extend the operation of this Act to such further period on a resolution being passed to that effect by the Legislative Assembly.'

அதாவது இந்த சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இந்த சட்டத்தை ஒரு வருஷத்திற்கு மேல் நீடிக்கலாம் என்று தீர்மானித்து அதன்படி காலத்தை நீடித்துக் கொள்ளலாம். இந்த 3-வது கிளாசில்

திட்டவட்டமாக ஒரு வருஷத்திற்கு மேல் ஒத்தி வைக்கப்படும் என்று இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது ஒரு வருஷம் மழை பெய்திருக்கிறது. இதைத் தொடர்ந்து மழை பெய்யுமோ என்னமோ தெரியாது. அதனுல் பின்னுடி நன்மை ஏற்படுமோ என்னமோ என்பதற்காகத் தான் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திருத்தம் என்ன வென்றுல் இந்த சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதன் மூலமாக எவ்வளவு காலத்திற்கு இந்த மாதிரியான கடனை ஒத்தி வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகின்றதோ அவ்வளவு காலத்திற்கு ஒத்தி வைப்பதற்கு இடம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

'*Explanation III*.—In any suit or proceeding or application of the nature mentioned in Section 3, any agriculturist may be represented by an agent authorized in writing other than a Pleader or an Advocate only to prove whether such person is an agriculturist or not.'

கனம் ராஜாஜி விரும்புவது போல் விவசாயிகளுக்கு அதிகப்படியான செலவைக் கொடுக்கக் கூடாது. மேலும் விவசாயிகளை கோர்ட்டு விவகாரங்களில் இழுத்து விடக் கூடாது என்பதற்காகத் தான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவ்விதம் இல்லாமல் போனுல் இந்த சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் நிறைவேருமல் போய் விடும். எவன் கடன் கொடுக்க வேண்டுமோ அவன் விவசாயி இல்லை என்று மனுப் போடுவதற்கு முடியும். இந்தக் கேஸில் கோர்ட்டுக்குச் சென்று அதை ஆட்சேபனை செய்து தான் ஒரு விவசாயி என்று ருஜு பண்ணுவதற்கு சட்ட வரம்பு இருக்கிறது. அதற்கு ஒரு வக்கீலை வைத்துக்கொண்டு அந்த வக்கீலின் மூலமாக அந்த கேசை நடத்தித்தான் ருஜுப்பிக்க முடியும். இந்த திருத்தத்தை நாம் ஒப்புக்கொண்டால் அந்த மாதிரி வக்கீல் வேண்டியது இல்லை. ஒரு விவசாயி தான் ஒரு விவசாயி என்று வக்கீல் வைக்காமல் தன் ஏஜெண்டு மூலமாக நிரூபிக்கமுடியும். இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதனுல் வக்கீல்களுடைய வருமானத்தை குறைக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லை. அங்கு இருக்கக் கூடிய ஒரு விவசாயி தான் ஒரு விவசாயி என்று நிரூபிப்பதற்கு ஒரு ஏஜண்ட் மூலமாகவோ அல்லது தானுக நேராகச் சென்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து அதன் மூலம்தான் ஒரு விவசாயி என்று நிரூபிப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திருத்தங்கள் ரொம்பவும் நியாயமானது. இதைப்பற்றி பொது விவாதத்தில் கூட இந்தப் பக்கத்தில் அதைப்பற்றி பிரதிபலித்திருக்கிறுர்கள். சர்க்கார் இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

SRI S. RAMASWAMI NAIDU :—" Mr. Speaker, Sir, I have nothing particular. I wanted to say that the time at our disposal is short and the number of amendments are also very large. Can we not take all the amendments as moved ?"

MR. SPEAKER :—" No, no. They should be formally moved and seconded."

3-20 p.m. *SRI P. B. K. RAJACHIDAMBARAM :—" மன்றத் தலைவர் அவர்களே, அரசியலார் எந்தக் காரணத்திற்காக இந்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறுர்களோ, அதே காரணத்திற்காகத்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கின்றேன்.

" அரசியலார் இந்தச் சட்டத்தின் முதல் ஷரத்தில், இந்தச் சட்டத்தின் அவசியத்தைப் பற்றி விளக்குகையில், விவசாயிகளுக்கு ஒரு வருஷ காலத்திற்கு இந்த வசதியை அளிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறுர்கள், எனது திருத்தத்தின் உட்கருத்தும் அதுதான். வழக்கறிஞர்கள் நிரம்பியிருக்கும் இந்த மந்திரிசபைக்கு இது நன்ருகத் தெரிந்திருக்கும்

நாட்டில் நியாய ஸ்தலங்கள் வருஷத்தில் 180 நாட்கள் வேலை செய்கின்றன. மீதி நாட்களில் இதைப் போன்ற ஒரு சட்டம் இருந்தாலும் இல்லா விட்டாலும் விவசாயி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது இருக்கிறது. ஆகவே, உண்மையாக நீங்கள் ஒரு வருஷகாலத்திற்கு இந்தச் சலுகையை அளிக்கவேண்டுமானால், ஏற்கனவே இருக்கக்கூடிய சட்ட திட்டங்களில் 180 நாட்களுக்குச் சலுகை இருக்கிறது. 180 நாட்களுக்கு நீடித்துக் கொடுப்பதற்கு உங்கள் சட்டத்தை இரண்டு வருஷ காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்பது உட்கருத்து. அரசாங்கம் எந்தக் காரணத்திற் காக இதைக் கொண்டு வந்திருக்கிறதோ, அதே காரணத்திற்காகத்தான் நான் இந்தத் திருத்தத்தை பிரேரிப்பதற்கு முன் வந்திருக்கின்றேன். அரசாங்கம் இதற்கு எந்த விதமான ஆட்சேபணையும் சொல்லமாட்டார்கள் என்று நினைத்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்.''

Sri N. K. PALANISAMI :—" கனம் சபாநாயகர் அவர்களே, பொது 3-22 p.m.
வாக இந்தச் சட்டத்தில் டிசம்பர் முதல் டிசம்பர் வரையில் என்று இருக்கிறது. எந்த அடிப்படையில் டிசம்பருக்கு டிசம்பர் என்று கணக்கிட் டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. உதாரணமாக, தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் இரண்டாவது வியாக்கியானத்தில் (Definition இல்) 'Agricultural year commences on the 1st day of May' என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு விவசாயிக்கு அறுவடை சமயம் புஞ்சைப் பிரதேசங்களில் ஏப்ரல் முதல் மே என்று இருக்கிறது. அதே அறுவடை பாக்கி டெல்டா பிரதேசங்களில் நவம்பர் முதல் டிசம்பர் என்று இருக்கிறது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஒரு வருஷ தவணை தீர்ந்தவுடன் நிலச்சுவான்தார்களின் காலில் விழ வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் 1,500 ரூபாய்க்கு பாண்டு எழுதிக் கொடுத்தால்தான், கையில் 1,000 ரூபாய் விவசாயிகளுக்கு கடன் கிடைக்கிறது. அந்த சமயத்தில் உடனடியாக அடுத்த டிசம்பர் வரும்போது அந்த விவசாயியிடம் பணம் இருக்காது. ரூ. 1,500-க்கு வட்டியும் போட்டு, கடன் கொடுத்தவன் நிலத்தை ஜப்தி செய்ய முற்படுகிறான். டிசம்பருக்கு டிசம்பர் என்று இருக்கிறதே அது எந்த அடிப்படை என்று தெரியவில்லை. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் விவசாய வருஷம் என்பது மே மாதம் என்று இருக்கிறது. அதுதான் அறுவடை சமயம். ஆகையால், குறைந்தது மே மாதம் வரை இதை 'extend' பண்ணவேண்டுமென்று வற்புறுத்துகின்றேன்.''

***Sri K. T. RAJU** :—"கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை ஆதரிக்கிறேன். ஒரு வருஷம் என்பது மசோதாவின் நோக்கம். மூன்று வருஷம் என்று கனம் அங்கத்தினர் ராமலிங்கம் அவர்களின் திருத்தம் கோருகிறது.

"கிராமங்களில் புரோநோட்டு எழுதிக் கொடுப்பது என்பது கடன் வாங்கிய தொகைக்கு அல்ல. 100 ரூபாய் கடன் வாங்கினால், ரூ. 200-க்கு எழுதிக் கொடுத்தால்தான் பணம் கொடுக்கிறார்கள். கோர்ட்டிலே கேஸ் போடும் போது எழுதிக் கொடுத்த 200 ரூபாய்க்கு தான் போடுகிறார்கள்.

"ஒரு வருஷத்திற்கு இந்த மசோதா தவணை அளித்திருக்கிறது. எப்பொழுது அந்தத் தேதி தீரும், எப்பொழுது கோர்ட்டிலே கேஸ் போடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் கடன் கொடுத்தவர் களெல்லாம். ஒரு வருஷம் என்பது குறுகிய காலம். ஒரு வருஷம் முடிந்தவுடன் பழையபடி கடன் கொடுத்தவர்கள் விவசாயிகளை நெருக்கிப் பணத்தைப் பெறக்கூடிய நிலைமை ஏற்படும். குறைந்தபக்ஷம் மூன்று வருஷ அவகாசம் இருந்தால்தான் நல்லது.

"இந்த சட்டமானது வந்ததற்குப் பிறகு இடைக் காலத்தில் விவசாயி களெல்லாம் கடன் வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடன் தொகையைவிட இரண்டு மூன்று மடங்குக்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கிக்கொண்டிருக்கிறார்களென் பதை இந்தச் சபையின் ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றேன். அதற்

[Sri K. T. Raju] [11th January 1954

காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி விசாரணை செய்யவேண்டும். அதற்கென ஒரு சட்டம் கொண்டுவர வேண்டியது அவசியம். எழுதிக் கொடுத்த பணத்தைப் பாதி ரத்து செய்துவிடவேண்டும். அப்பொழுதுதான் ஏழை விவசாயிகள் உருப்படியாக வாழ முடியும்.

" கடன் நிவாரணச் சட்டம் பல வருஷங்களுக்கு முன் வந்த போது லேவாதேவிக்காரர்கள் இந்த முறையைக் கையாண்டு கொண்டிருந்தார்கள். 100 ரூபாய்க்கு பதிலாக 200 ரூபாய்க்கு புரோநோட்டு வாங்கும் முறை சட்டபூர்வமாக நடந்திருக்கிறது. பணம் கொடுக்காவிட்டால், எழுதிக்கொடுத்த தொகைக்கு கோர்ட்டில் கேஸ் போட்டு வசூல் செய்துவிடுகிறார்கள். விவசாயிகளுக்குப் பணம் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் இந்த மாதிரி அதிகத் தொகைக்கு எழுதிக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறார்கள். ஒரு வருஷ தவணை என்பது வெகு குறுகிய காலமாக இருக்கிறது. ஒரு வருஷம் எப்பொழுது முடியுமோ என்று காத்துக் கொண்டிருந்து கடன்காரர்கள் விவசாயிகளை நெறுக்கும்படியான நிலைமை ஏற்படும். இந்த மசோதாவை விவசாயிகளுடைய நன்மைக்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்பது உண்மையானால், இந்த சட்டத்தை மூன்று வருஷத்திற்கு நீடிக்கவேண்டும். அப்பொழுது தான் கடன் பட்ட ஏழை விவசாயிகளுக்கு உண்மையாகவே ஓரளவுக்கு நன்மை செய்ததாக ஏற்படும். அதன்படி இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த அடிப்படையிலே கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் திருத்தம் கொண்டு வந்திருப்பதனால், அந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கின்றேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன். "

3-25 p.m. **Sri K. Aranganathan** :—" கனம் அவைத்தலைவர் அவர்களே, தற்காலிகமாக விவசாயிகளுக்கு கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்திருப்பதை நான் வரவேற்கின்றேன். விவசாயிகள் கடன்பட்டியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு தொல்லைகள் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டு தான் அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம். மற்றவர்களும் நினைக்கிறார்கள். 1944-ம் வருஷத்திலிருந்து தென்னாற்காடு வடாற்காடு மாவட்டங்களில் பருவ மழை தவறிவிட்டது . . ."

The Hon Sri C. Rajagopalachari :—" இதெல்லாம் காலையிலேயே பேசியாய்விட்டதே ! "

Sri K. Aranganathan :—" ஒவ்வொரு ஆண்டிலும் விவசாயிகள் நஷ்டம் அடைந்துகொண்டு வந்திருக்கிறார்கள். நஞ்சைப் பயிரில் ஏக்கருக்கு ரூ. 180 முதல் ரூ. 200 வரையிலும், புஞ்சைப் பயிரில் ரூ. 40 முதல் 60 வரையிலும் விவசாயிகள் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். சென்ற 9 ஆண்டுகளுக்கு கணக்கிட்டுப் பார்த்தால் விவசாயிகள் சராசரி ரூ. 2,000 வரையில் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். சமீபத்தில் மழை பெய்த காரணத்தால் ஏதோ நல்ல பலன் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த காலத்தில், பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டுவிட்டன. ஆகவே கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையையும் அவர்கள் இழந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இந்த அவசரச் சட்டம் வந்ததை வரவேற்கின்றோம். ஆனால், ஒரு ஆண்டு தவணை மட்டும் கொடுத்திருப்பது போதாது. அதைக் கண்டு நாங்கள் வருந்துகிறோம். குறைந்தபக்ஷம் மூன்று ஆண்டுகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையை நான் வரவேற்கின்றேன்."

Sri K. P. Gopalan :—" Sir, my amendment is a very simple one. If ' agriculturist ' alone is added, agricultural

labourers would be left out. The Hon. Minister's explanation did not deal with agricultural labourers. There are thousands of agricultural labourers. They are really landless poor people and their condition is a miserable one. If we go into the history of these people, we will know that they owned lands once, but they have become landless now, and they are labourers. Apart from that, because of the drought, famine and flood, these people have incurred heavy debts. If this Bill is not going to benefit them, there is no hope for them. Our Chief Minister claims that he is championing the cause of the poor people. Everybody will praise that. (Interruption by Chief Minister: 'Say, accept that'.) If we forget agricultural labourers, we will not be doing good to the poor. I request the Hon. Chief Minister to include agricultural labourers also. (The Hon. Chief Minister was heard to say: 'We cannot have general insolvency. Credit will be ruined.') I understand that the landlords will be benefited by this Bill; but I do not know why the poor agricultural labourers should not be benefited.''

* **Sri P. VENKATESHA SHOLAGAR** :—" கனம் சபா நாயகர் அவர்களே, தோழர் ராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் கொண்டுவந்த சட்டத்தில் விவசாயிகளுக்கு சரியான பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. ஏழை விவசாயிகள் சென்ற வருஷம் கொடுக்க வேண்டிய பாக்கியை இன்னும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்தக் கடன் தொகையை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்ய பல பேர்களுக்கு கோர்ட்டுகளில் உத்திரவு இருக்கிறது. இன்னும் விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்யவும் அவர்களை வெளியேற்றவும் கோர்ட்டுஹாலில் உத்திரவு பெருவதற்கு பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் கொடுக்க வேண்டிய கடனை ஒரு வருஷம் தள்ளிக்கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. அப்படி இருந்தும் சிலர் மட்டும் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த சட்டமும் யாவருக்கும் பயன்படவேண்டுமானால் ரெவன்யு சிவில் கோர்ட்டுகளில் தாவா இருந்தாலும் அவர்களை கட்டுப்படுத்தாது என்று இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோர்டுகளில் வக்கீல்களை வாதிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். விவசாயிகளிடம் சட்டத்தை விளம்பரம் செய்யாததால் ஜனங்கள் சரியாக இதைப் புரிந்துகொள்ளவில்லை இதனால் பல அதிகாரிகள் நியாயத்தைப்பார்க்காமல் சட்டத்தைப் பார்த்துக்கொண்டு பலரை நிலத்திலிருந்து வெளியேற்ற திட்டமிடும் ஏற்பாடு செய்கின்றனர். பல ஏழை விவசாயிகளை வெளியேற்றியுமிருக்கிறார்கள். இப்படிக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டு மென்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கோறுகிறோம்.

"குத்தகை பாக்கிக்காக பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் அப்புறப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் தாங்கள் கட்டவேண்டிய கடன் தொகையைக் கட்டத்தவறுவதால் அடிக்கடி கோர்ட்டுகளுக்கு இழுக்கப்படுகிறார்கள். சட்ட நுணுக்கம் தெரியாததால் அவர்கள் வக்கீல்களின் உதவியை நாடுகிறார்கள். கோர்ட்டில் தான் ஒரு விவசாயி என்று நிரூபிப்பதற்கு ஒரு பிரதிநிதி மூலமாகவோ அல்லது தானாகவோ நேரில் சென்று எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்து அதன் மூலம் தான் ஒரு விவசாயி என்று நிரூபிப்பதற்கு வசதி செய்துக் கொடுக்க வேண்டும். இதற்காக விவசாயிகள் வக்கீல் ஒத்தாசைக் கொண்டு பேசாமல் இருந்தால் நலமாக இருக்கும். தஞ்சை சட்டத்தில் இவ்விதம் இருப்பதால் என்றும் பாதகமில்லை. ஆகையால் விவசாயிகளுக்கு அதிக கஷ்டமோ பண நஷ்டமோ ஏற்படாது. இதனால் பல சௌகர்யங்கள் ஏற்படு மென்று

[Sri P. Venkatesha Sholagar] [11th January 1954

இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகின்றேன். சர்க்கார் இதை ஏற்றுக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொண்டு இதை நான் வற்புறுத்துகிறேன். இதனால் ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் எவ்வித நஷ்டமும் ஏற்படாது."

* SRI P. S. KRISHNASWAMI AYYANGAR:—"Sir, I am sorry, I was not present when my name was called. I apologise to the Speaker. I may be permitted to move my amendment. Both the amendments Nos. 80 and 81 relate to clause 3 and I will move them together. I beg to move—

'For *paragraph* 1, substitute *the following* :—

"*Bar of suits and applications—Before the expiry of a year from the date of commencement of this Act, the following legal proceedings cannot be instituted :—*

(1) *suits for recovery of debts from agriculturists,*

(2) *applications for the execution of decrees for payment of moneys passed in suits for recovery of debts from agriculturists,*

(3) *insolvency proceedings against agriculturists, and*

(4) *suits for ejectment of agriculturists from their leaseholds on the ground of forfeiture for non-payment of rent.*"

Below Explanation II add *the following explanation* :—

"*Explanation III.—A suit shall not be deemed to be a suit for recovery of a debt merely by reason of a prayer in the plaint for award of costs to the plaintiff.*"'

"With regard to stay of suits, there may be a case where there may be a lease deed wherein there may be a provision for the landlord or lessor to take possession of the property if default is made in the payment of rent within the stipulated time. In such a case, the landlord may file a suit for ejecting the tenant and in such a suit, the tenant will be relieved against ejectment if he pays arrears of rent into the Court. Therefore, in such a suit, he will be indirectly compelled or forced to deposit the arrears of rent. Thus, though outwardly the suit may be for ejectment, it will be a suit for recovery of rent actually. For unless he deposits the rent into Court, he will not be permitted to remain on the land. He will be dispossessed of the land by means of a decree. There is no provision to prevent such a suit.

"Again, in the case of insolvency proceedings, when once the insolvency petition is filed by the creditor, the entire property of the insolvent vests in the Official Receiver or Official Assignee. In that case, he is deprived of his property, which means he has necessarily to pay the debts. Therefore, insolvency proceedings also will have to be included in the category of proceedings that will have to be eschewed.

"Now a Government amendment has been brought in wherein it is said that a suit for possession of land will not be a suit

for recovery of debt also merely by reason of the fact that there is a prayer added in the plaint for recovery of mesne profit. So a prayer for recovery of mesne profits will not make a suit for possession of a suit for recovery of rent; but, some people even argue that if there is a prayer for award of costs, it should be considered a suit for recovery of money. Therefore, I have suggested an amendment that 'a suit shall not be deemed to be a suit for recovery of debt merely by reason of a prayer in the plaint for award of costs to the plaintiffs'. If Government accept this, it may be incorporated in the respective clause."

The motion was duly seconded.

MR. SPEAKER :—" Motion moved—

'*For* paragraph 1, *substitute* the following :—

" Bar of suit and applications—Before the expiry of a year from the date of commencement of this Act, the following legal proceedings cannot be instituted :—

(1) suits for recovery of debts from agriculturists,

(2) applications for the execution of decrees for payment of moneys passed in suits for recovery of debts from agriculturists,

(3) insolvency proceedings against agriculturists, and

(4) suits for ejectment of agriculturists from their leaseholds on the ground of forfeiture for non-payment of rent."

and below Explanation II, *add* the following Explanation :—

" *Explanation III.*—A suit shall not be deemed to be a suit for recovery of a debt merely by reason of a prayer in the plaint for award of costs to the plaintiff." ' "

SRI S. PANCHAKSHARAM :—" Sir, the original clause as it stands proposes to bar or ban suits even against non-agriculturists. I do not think Government want to give protection to non-agriculturists. If the creditor is not able to recover from an agriculturist why should he be banned from filing a suit against the non-agriculturist? I can understand if Government wants that after obtaining a decree and if the amount is not realised from the non-agriculturist-debtor, the execution may be stayed for at least one year and further, allowed to be taken after the expiry of the said period. Therefore, my object is that non-agriculturist debtors should not be given protection under this clause.

" My next amendment is 'before the expiry of the year 1954'. The span of life of the Bill is one year. It will be 15th January or so before it comes into effect. There may be more definiteness if we stipulate the exact period.

" As for my amendment to the Explanation, the object of the Bill is to give protection for agriculturist-debtors, that is, if a creditor wants to file a suit for recovery of moneys due to him, it is all right to prevent that. But why should all suits where

action against an agriculturist, lies be banned? Supposing there is damage to my property by a trespasser or my goods are carried away. Such a person is protected by the comprehensive definition of the word ' debt.' Even such cases are sought to be banned by this Bill within the four corners of the definition of the word ' debt '. I want the Government to permit all other suits and other reliefs.''

SRI S. S. RAMASAMI PADAYACHI :—'' கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த 7, 8, ஆண்டுகள் பருவ மழை தவறிய காரணத்தினால் விவசாயிகள் மிகுந்தக் கஷ்டத்திற்குள்ளாகியும், கடன் தொல்லைகளுக்கு ஆளாகியும் இருக்கிறார்கள். இந்த வருஷம் தான் மழை பெய்து நாட்டில் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்களுக்கு விளைந்த நெல்லின் மூலம் வருமானம் வந்தவுடனே தாங்கள் வாங்கிய கடனைக் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆதலால் ஒரு வருஷத்தில் விவசாயிகள் தங்கள் கடனைக் கொடுக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் ஒருவிதப் பயனும் ஏற்படாது. கடந்த 7, 8, ஆண்டுகளாக மிகுந்த பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களின் கடன் தொகையை திருப்பிக் கொடுக்க ஒரு வருஷ கால தவணை என்பது மிகக் குறைவு என்று இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது அவர்கள் ஒரு வருஷத்தில் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இரண்டாவதாக சென்ற ஆண்டில் விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் விற்று விட்டபடியால் அவர்கள் விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு அதிகக்கடன் வாங்கவேண்டி இருந்தது. அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அப்பொழுது கடன் பட்டவர்கள் அவர்கள் வாங்கிய கடன் தொகையை ஒரு வருஷத்தில் திருப்பி கட்டுவார்கள் என்ற நம்பிக்கையும் இப்பொழுது இல்லை.

'' ஆகையால் ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி அவர்கள் கொடுக்க வேண்டிய கடன் தொகையை அடுத்த வருஷம் திருப்பிக் கொடுக்கும் போது விவசாயிகள் மூன்றில் ஒரு பங்கு மட்டும் கொடுக்கலாம் என்று மசோதாவில் திருத்தம் செய்யப்படவேண்டும். அதற்கு அடுத்த வருஷம் மீதி கடன் பாக்கியையும், மூன்றாவது வருஷம் கொடுக்க வேண்டிய தொகை பூராவையும் கொடுப்பதற்கு அரசாங்கம் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன்.''

* SRI A. RATNAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய கடன் ஒத்திவைப்பு மசோதாவானது விவசாயிகளுக்கு பலன் தரும் வகையில் இல்லை என்று சொல்ல விரும்புகின்றேன். இந்த நாட்டில் 100-க்கு 90 வீதம் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இந்தத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். இந்த மசோதாவில் பல வகையில் குறைகள் நிறைந்திருக்கின்றன, ஏனென்றால் இது தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடியதாய் இருக்க வேண்டும் என்று தான் சொல்ல வேண்டும்.''

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—'' மற்ற சமூகத்தைப் போல்தானே உங்கள் சமூகத்திற்கும் நன்மை ஏற்படப்போகிறது.''

* SRI A. RATNAM :—'' முக்கியமாக நான் விரும்புகிறேன் என்று சொல்கிறேனே தவிர பொதுப்படையாக மற்ற சமூகத்தைப்பற்றி பேச முடியாது என்று நான் சொல்லவில்லை. இப்போது பேசிய அத்தனைபேரும் வழக்கறிஞராகவும், தனவந்தராகவும், சட்ட நுணுக்கத்தில் அனுபவம் உள்ளவராகவும் இருந்தும் தாழ்த்தப்பட்ட தோழர்கள் ஒருவர் கூட இதைப்பற்றி பேசவில்லை யென்ற காரணத்திற்காகத்தான் இதைக்குறிப்பிட ஆசைப்படுகிறேன். மேலும் 42 ஹரிஜன் எம்.எல். ஏ-க்கள் இருந்தும் கூட இந்த மசோதவைப்பற்றி விவரமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.''

11th January 1954]

Mr. SPEAKER:—" எல்லோருக்கும் தான் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. அதனால் இப்போது ஒருவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்று சொல்ல முடியாது."

***Sri A. RATNAM**:—" இந்த மசோதாவில் ஒரு வருஷத்திற்கு அவர்கள் கொடுக்கவேண்டிய கடனுக்குத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த டிசம்பர் மாதத்தில் தவணை முடிவடைகிறது. ஆனால் அடுத்த ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் தான் விவசாயிகள் அறுவடையை ஆரம்பிக்கப் போகிறார்கள். விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கவோ சுபிட்சமாக வாழவோ அதற்குப் பிறகுதான் முடியும். அறுவடைக்கு பிறகு தான் விவசாயிகள் தங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று இந்த மசோதாவில் விதி ஒன்று இயற்றப்பட வேண்டும். விவசாயிகளுக்கு கடன் கொடுத்த பலர் அவர்களைத் துன்புறுத்தக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏழை விவசாயிகள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்தால்தான், அறுவடை அறுத்தால்தான் அவர்கள் பட்டக்கடனைத் தீர்க்க முடியுமே தவிர மற்றபடி தீர்க்க முடியாது. அறுவடை அறுத்து அதை விற்பனைச் செய்து அந்தத் தொகையை கடனுக்குத்தான் கொடுக்க முடியுமே தவிர வேறெந்தச் செலவுக்கும் உபயோகப்படுத்த முடியாது. நான் திருத்தம் கோருவதெல்லாம் ஒருவருஷத் தவணைபோதாது இரண்டு வருஷமோ அல்லது மூன்று வருஷமோ அதிகம் செய்ய வெண்டும் என்று இந்தத் திருத்தத்தை ஆமோதிக்கிறேன். ஆகையால் டிசெம்பர் மாதம் அறுவடை செய்து அதை விற்பனை செய்து வட்டியும் முதலும் கொடுக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. அது முடியாது. ஆகவே இந்தக் கடன் தவணை ஒரு வருஷமாக இல்லாமல், இரண்டு வருஷமோ அல்லது மூன்று வருஷமாக ஆக்கப்பட வேண்டும்.

